[illegible]

V.3 No. 50 18 [illegible] 1930

ஆL
ஊ211, M28 KN
M20.3.50
189B4

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly
வியாழன்தோறும் வெளிவரும்.

19 FEB 193?

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 3] 1930 ௵ டிசம்பர் ௴ 18௳ [No 50

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Ourselves) 981
2. குறுந்தொகை (பாட்டு 392—401) K. இராமரத்னம் ஐயர் B.A. 983
3. அப்பர் (ஓவியமும் கவித்வமும்) E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. 985
4. நம்மாழ்வார் வைபவம் (2ம் பத்து 6ம் தசகம்) K. இராஜகோபாலாசாரியார் B.A., B.L. 988
5. வேண்டல் வளர்த்தமரம் (ஒரு சிறு கதை) K. இராஜகோபாலன் 990
6. கம்ப ராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 993
7. தமிழ்ப்பாடம் (இலக்கணம்) 995
8. வர்த்தமானம் 996
9. அட்டவணை 997

## கலாநிலயம்

189134

தனக்குரிய தகுதியினும் பரிவின் மிகுதிபற்றியே, 'சான்றது' என அறிஞர் பலரால் ஆதரிக்கலாகுமிக் கலாநிலயத்தைப் பெற்றிருப்பவர் மூன்றும் ஆண்டு முதிர்கின்ற இந்நாள் பெரிதுவப்பாரென்று எண்ணத் துணிகின்றோம். மாநடப் பெருமைக் கடுக்காத சிறுதொழில்களினின்று விலகித் தனியரசாட்சியில் தாழுமுள்ளத்தரா யிருக்கின்ற விழுமியோர்க்கொரு நல்லமைச்சாய் நடமாட விழைகின்ற இக் கலாநிலயம் நீதியை விடாது நின்றுரைக்கும் நோக்கத்தை ஓரளவு பயன்படவே நிகழ்த்தி வருகின்றதென்னும் நம்பிக்கை நண்பர் பலர் எமக்கு வரைகின்ற நிருபங்களிலிருந்து நிச்சய மடைகின்றது. ஈதன்றி ஊதியம் வேறு யாதும் எதிர்நோக்காக் "கலாநிலயம்" இறைவன் கருணைக்கிணங்கி இன்னமும் இவ்வழியில் ஆற்றுதற்குக் கருமங்கள் சிலவுள.

அறிவிற் கமைச்சாகி நிற்கு மிவ்விதழ்கள் உணர்விற்குறுசுவையாய் உதவவேண்டுமெனும் விருப்பினல் இலக்கிய மரபுசேர்ந்த மதுரவாசகங்களைத் தழுவிக் கொணர்ந்து நண்பர்களை விருந்துண்பிக்கும் நினைவு மிக உடையன. அடிசிலின் சிறப்பிலும் அதனை இடுவார் முகமே உணவிற்குச் சுவையை ஊட்டுகின்றதெனும் உண்மையை மனங்கொண்டு மதிப்பார்க்கு இவ்விதழ்களில் வரும் கட்டுரைகளின் ஏற்றங் குறைவுகளை யாம் எடுத்து இயம்பவேண்டா. ஒன்றையே நோக்கும் இரு கண்கள்போல் தேவாரமும் திருவாய்மொழியும் தழைக்கின்ற இதழ்களால் இன்பம் எய்தாதிருத்தல் அரிது. தம்முடைய பெருமைக்குத் தாமே சரியாகும் இவைதவிர ஏனைய கட்டுரைகளும் உணர்வினல் அறிவையும், அறிவினல் உணர்வையும் எய்துவிக்க வல்லனவாய் அமைந்திருக்கின்ற வென்பதை ஆழ்ந்து நோக்கினவர் அறிந்திருப்பார். கம்பராமாயணம், சிலப்பதிகாரம், குறுந்தொகை முதலியவை முந்தினின்றன? ஆங்கிலப் புலவர்தம் அருந்திறல் பொருளுரைகள் பின்னிணைத்தைச் சார்ந்தவர்க்கும். இவ்வாண்டினில் மானதசாத்திரம் முடியப்பெறுதப்படியினல் அடுத்தவாண்டிலும்தொடரலாகும்.

அமைச்சும் அருஞ்சுவை விருந்தும் ஆவதோ டமையாது தமிழினைக் கற்க விழைவார்க்கொரு ஆசிரியனுய் அமைந்து இம்மூன்று ஆண்டுகளில் வரைந்து வந்த தமிழ்ப்பாடம் இன்றோடு முற்றுப்பெறுகின்றது. இந்த 150 பாடங்களையும் சிந்தனைசெலுத்தி ஓதினோர்க்கு அருந்தமிழ் நூல்களைத் தாமே படித்து இன்புறுதற்கு இனி எவ்வகை யிடையூறும் இருக்க வியலாது என்பது திண்ணம். இப்பத்திரிகையின் வாசகர் பலர் இப்பாடங்களின் வழியாய்த்தமிழ்மொழித்தேர்ச்சி நன்கு அடைந்துகொண்டனர் என்பதை அறிய யாம் பெரிதும் மகிழ்கின்றோம். இதுகாறும் அம்முயற்சி கொண்டிராதார் இனியேனும் அவைகளை ஓதித் தமிழ்மொழி அறிவில் தேர்ந்தவர்களாமாறு விழைகின்றது இக் கலாநிலயம். இம்மூன்று ஆண்டு இதழ்களையும் பெற்றிருப்போர் வாரத்தில் மூன்று பாடங்களெனப் படித்துக் கொள்வாராயின் வருடம் ஒன்றிற்குள் தமிழ் நூற்களின் பெருமையை உணர்ந்து இன்புறுதற்குரிய தகுதியுடையவர்களாவார்கள் என்பதற்கு ஐயமில்லை. இலக்கணப்பகுதியில் யாம், புணரிலக்கணத்தை ஓர் பாகுபடுத்தி முன்னைய இலக்கணநூல்கள் முயலாதுவிட்ட விதிகளை எம்மால் இயன்றவளவு குறிப்பித்திருக்கின்றோம். இவ்வகையில் மேன்மேலும்ஆராய்ந்து, இலக்கணத்தைத் தெளிவுசெய்யப் பண்டிதர்களுக்கு இது உதவியாகலாம். அணிஇலக்கணமும் அங்கங்கே இயம்பிவந்துளோம். பாடமாய்க் கற்கவேண்டிய இலக்கியப்பகுதிகளும் இதுவரை உரைத்தன போதும். இனி யாவரும் எளிதில் கற்றுச் செய்யுளமைப்பின் இன்பத்தை உணரும்வகை யாப்பு இலக்கணத்தையும் அடுத்தவாண்டில் இவ்விதழ்களில் வரையலாவோம். புதுவாண்டில் சூளாமணி என்னும் நூல் உரையுடன் வரையப்பெறும்.

ஆதரத்துடன் நம் கலாநிலயக் கட்டுரைகளை வரைவோர் ஓதுவோர் ஆய எம் நண்பர்கள் இருதிறத்தோரும் எம்முடைய நன்றிக்குப் பாத்திராகின்றனர். அன்னார் மின்னார் சடையண்ணலார் அருளால் நெடிதூழி வாழ்க.

# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரீடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலி பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

**மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.**

**விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு**

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::




# குறுந்தொகை

[971-வது பக்கத் தொடர்ச்சி]

தும்பிசேர் கீரனார்] 392 [குறிஞ்சி

வரையாதொழுகுந் தலைமகன் வந்து சிறைப்புறத்தானாகத் தலைமகளின் துயரநிலையை அவனுக்கு அறிவிப்பாளாய் வண்டுக்கு உரைப்பாள்போலத் தோழி சொல்லியது.

அம்ம வாழியோ மணிச்சிறைத் தும்பி,
நன்மொழிக் கச்ச மில்லை; அவர்நாட்
டண்ண னெடுவரைச் சேறி யாயிற்
கடவை மிடைந்த துடவையஞ் சிறுதினைத்
துளிரெறி நுண்டுகட் களைஞர் தங்கை
தமராற் றீராள் என்மோ, அரசர்
நிரைசேர் நுண்டேர் போலப்
பிரசந் தூங்கு மலைக்கிழ வோற்கே.

(உரை). அழகிய சிறகையுடைய வண்டே, நான் சொல்லுமிதனைக்கேட்டு அவ்வண்ணஞ்செய்யின் நீ நெடிது வாழ்வாயாக. பிறர்க்கு நலத்தைச்செய்யும் மொழியைச்சொல்வதற்கு எவரும் அஞ்சவேண்டுவதில்லை. அரசருடைய நிரையாக நிறுத்திய நுட்பமான தேரைப்போலத் தேனடைகள் வரிசையாகத் தொங்கும் மலைநாடனுக்கு, அவர் நாட்டிலுள்ள பெரிய மலையிடத்து நீ செல்வாயாகில், கடக்கும் வழிகள் நெருங்கிய புனங்களிலுள்ள சிறுதினையின் இளந்தளிர்களை அரிக்குஞ் சிறு புழுமுதலிய பகையைக் களைந்து தினையை விளைவிப்பவராகிய குறவரின் தங்கையாகிய நங்கை தானுற்ற நோயைத் தனது தமரால் தீர்க்கப் பெறாளாயினள், என்று அவருக்கு உரைப்பாயாக.

மணி - அழகு; நீலமணி போன்ற என்றுமாம். தும்பி - அண்மைவிளி. அண்ணல் - பெருமை, சிறப்பு. கடவை - கடக்கும் வழி; 'நடவை' என்றாற்போல வந்தது. துடவை - தோட்டம்; இங்குத் தினைப்புனம். துகள் - குற்றம், பகை; இங்குத் தினைத்தளிரை யரிக்கும் புழுக்கள். 'தமரால் தீராள்' என்றது, 'உன்னாலேயே தீர்க்கப்படல்வேண்டும்' என்று குறிப்பித்தவாறும். நுண்தேர் - நுட்பான வேலைப்பாடமைந்த தேர். பிரசம் - தேனிறால்.

---

பரணர்] 393 [குறிஞ்சி

தலைமகள் தோழிக்கு உரைப்பாளாய்ச் சிறைப்புறத்தானான தலைமகனுக்கு அலர்மலிவை உணர்த்தியது.

மயங்குமலர்க் கோதை குழைய மகிழ்நன்
முயங்கிய நாள்தவச் சிலவே; அலரே
கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூட் பாண்டியன் வினைவ லதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவாட் கொங்க ரார்ப்பினும் பெரிதே.

(உரை). பல மலரைக்கலந்து கட்டிய மாலை குழையும்படி மகிழ்நன் என்னைமருவியநாளோமிகச்சிலவே; ஆனால் அதுகாரணமாக எழுந்த அலர்மொழியோ (ஊராரைத்தூற்றெழுப்பும்) கூவுதலையுடைய கோழியினார்ப்பினும், வாகையென்னும் போர்க்களத்தில் பசும்பூட்பாண்டியனால் போர்த்தொழிலில் வல்ல 'அதிகன்' என்பவன் தனது யானையோடு மடிந்த நாளில் ஒளியைவீசும் வாட்படையையுடைய கொங்கர்கள் (ஆவலித்திரங்கிய) ஆர்ப்பினும் மிகப் பெரிதாகியது. (இதற்கு நாம் இனி என்செய்வாம்?)

கூகை - கூவுதல். கோழி - (ஆகுபெயர்) கோழியின் ஆர்ப்பு; கோழியினும், என்று ஐந்தனுருபும் உம்மும் வருவிக்க. வாகை - ஓரிடம். பறந்தலை - போர்க்களம். இவ் வாகைப்போர்க்களத்தில் பசும்பூட்பாண்டியன் என்பவன் கொங்கருடன் போர்புரிந்து அவர் படைத்தலைவனான 'அதிகன்' என்பவனை வென்று களத்தில்வீழ்த்திய வரலாறு அகத்தினும் புறத்தினும் பலவிடங்களிற் குறிக்கப்பட்டிருக்கின்றது.

அலரே,
* வாடாப் பூவிற் கொங்க ரோட்டி
நாடுபல தந்த பசும்பூட் பாண்டியன்
பொன்மலி நெடுநகர்க் கூட லாடிய
இன்னிசை யார்ப்பினும் பெரிதே—(அகம் 253)

அதிகன்
கோளற வறியாப் பயங்கெழு பலவின்
வேங்கை சேர்ந்த வெற்பகம் பொலிய
வில்கெழு தானைப் பசும்பூட் பாண்டியன்
களிறணி வெல்கொடி— (ஷை 161)

'தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்' என்பவன் இவனேயென்பது 76-ம் புறப்பாட்டுரையால் தெரிகின்றது.

---

குறியிறையார்] 394 [குறிஞ்சி

வரைவிடை அலரெழலால் வருந்தி ஆற்றாளாகிய தலைமகளை ஆற்றுவிக்கலுற்ற தோழி தலைமகனை இயற்பழித்துக் கூறியது.

முழந்தா ளிரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமக ளீன்ற
குறியிறைப் புதல்வரொடு மறுவந் தோடிக்
கூரை முற்றுஞ் சாரனுடன்
முன்னா ளினிய தாகிப் பின்னாள்
வார்தினை மேஎய்ந் தாங்குப்
பகையா கின்றவர் நகைவிளை யாட்டே.

(உரை). கள்ளுண்டு மகிழுங் குறமகள் பெற்ற சிறுருடன் சேர்ந்து ஓடி அக்குறவர் பாக்கத்திலுள்ள தாழ்ந்த இறப்பினையுடைய குரம்பையைச் சுற்றிச்சுற்றி வந்து விளையாடும் கரிய பிடியின் முழங்காலினளவு வளர்ந்த மென்மையான தலையையுடைய யானைக்கன்று அக்காலத்தில் அவர்க்கினிய நண்பாகிப் பிந்திப் பெரிதாக வளர்ந்தகாலத்தில் அவர் விளைத்த நீண்ட தினைக்கதிர்களை மேய்ந்து அவர்க்குப் பகையானாற்போல, அத்தகைய குடில்களையுடைய மலைநாடனுடன் நாம் முன்னாள் நகைத்து விளையாட்டாகச் செய்த நட்பும் அந்நாள் இனிதாகி இந்நாள் நமக்குத் துன்பத்தை விளைக்கும் பகையாயிற்று. (இப்பெற்றித்தே அவன் நம்மிடத்து வைத்துள்ள அன்பு).

கயம் - மென்மை; 'கயந்தலை' யென்றே யானைக்கன்றுக்கொரு பெயருண்மையின் (பிங்கலந்தை, 8-106) கயந்தலைக் குழவி என்பதை இருபெயரொட்டெனக் கொள்ளலுமாம். பாக்கம் - நெய்தனிலத்தூர்க்குச் சிறப்பாகவும், குறிஞ்சி மருத நிலத்தூர்களுக்குப் பொதுவாகவும் பெயராம். குறியிறை - குறுகிய இறப்பு: low eaves; 'குறியிறை' என்பதைக் 'கூரை'க்கு அடையாக்குக: 'குறியிறைக்குரம்பை' என்றார் அகத்தினும் (210). கூரை - குடில், குரம்பை. மறுவந்து-சேர்ந்து. முற்றுதல் - சூழ்தல். அவர் — 'நாடன்' என்று முற்கூறி 'அவர்' என்று பிற்கூறியது வெகுளிபற்றி.

---

395
[குறிஞ்சி]

வரைவிடைவைத்துத் தலைமகன் பிரிந்தகாலை ஆற்றாளாகிய தலைமகள் 'நாம் இனி நாணைத்துறந்து ஆண்டுச் செல்வாம்' என்று தோழிக்குச் சொல்லியது.

---

*வாடாப்பூ - வாகையென்னும் போர்க்களம்.

நெஞ்சே நிறையொல் லாதே; அவரே
அன்பின் மையின் அருள்பொரு ளென்னார்,
வன்கண் கொண்டு வலித்துவல் லுநரே;
யாவது மதியிற் கிவறார் போலக்
களைய ராயினும் 'கண்ணினிது படீஇயர்,
அஞ்சேல்' என்மரு மில்லை ; அந்தில்
அளிதோ தானே நாணே,
யாங்கா வாவது நீங்கப் படினே.

(உரை). எனது நெஞ்சோ நிறையென்னுங் குணத்தைப் பொருந்தாததாய் இருக்கின்றது; அவரோ நம்மிடத்து அன்பின்மையால் கருணையென்பதை ஒரு பொருளாக மதியாதவராய்க் கொடுமையை மேற்கொண்டு (தான் விரும்பிய வண்ணம்) நம்மை வலித்துக்கொள்ள வல்லவராக இருக்கின்றார்; எனக்கு உழையராய்ப் பலர் இருப்பினும்...'நீ அஞ்சாதே; இனிது துயில்வாயாக' என்று சொல்லித் தேற்றுபவர் ஒருவருமிலர்; இந்த நிலைமையில் நாணுகிய அது நம்மாற் காக்கப்படாது நீக்கப்படுமாயின் அஃது இரங்கற்பால தொன்றோ? அன்று.

நிறை-இரகசியங்களை வெளிப்படுத்தாமல் மனதுக்குள்ளே அடக்கி நிறுத்தல்; 'நிறை யெனப்படுவது மறைபிற ரறியாமை' என்றார் பிறரும்; (நெய்தற்கலி-16). வலித்து - வலித்தல். 'யாவதும் மதியிற்கிவறார்' என்ற சொற்றொடரின் பொருள் தெளியக்கூடவில்லை. களையர்- மிகுதியானவர், பலர். அந்தில் - அவ்விடத்தில்; அந்த நிலையில்; அசைநிலையுமாம். அளிதோ - இரங்கத்தக்கதோ, அளிக்கத்த[illegible]ா. யாம் காவா அது. 'அளிதோ தானே... நீ[illegible]படினே' என்றது 'இனி நாணத்தைவிட்டு நாம் தலைமகன் இருக்கும் இடத்துக்குச் செல்வதே செய்யத்தக்கது; அதிற் குற்றமொன்றும் இல்லை' என்றவாறும்.

கயமனார்] 396 [பாலை

மகளின் உடன்போக்கை உணர்ந்த தாய் தனக்குத் தானே சொல்லி இரங்கியது.

பாலு முண்ணாள், பந்து மேவாள்
விளையா டாயமோ டயர்வோள் இனியே
எளிதென வுணர்ந்தனள் கொல்லோ, முளிசினை
ஓமை குத்திய வுயர்கோட் டொருத்தல்
வேனிற் குன்றத்து வெவ்வறைக் கவாஅன்
மழைமுழங்கு கடுங்குர லோர்க்குங்
கழைதிரங் காரிடை அவனொடு செலவே.

(உரை). பாற்சோற்றையும் உண்ணாது, பந்தாடலையும் விரும்பாது விளையாடுந் தனது தோழிமார் கூட்டத்தோடு விளையாடுபவளாகிய என்மகள் இப்போது, உலர்ந்த கிளைகளையுடைய ஓமைமரத்தைக் குத்திய நீண்ட கொம்பினையுடைய ஆண்யானை வேனிலால் வெந்த மலைப்பாறையிலிருந்து மேகம் இடிக்கும் முழக்கத்தைச் செவிசாய்த்துக் கேட்கும் மூங்கில்கள் உலர்ந்து சுருங்கிய கடத்தற்கரிய சுரத்திடைக் காதலனுடன் தனித்துச் செல்லுதலை எளிதெனக் கருதினள் கொல்லோ? (அவ்வாறாயின் அஃதென்ன அறியாமை?)

ஒருத்தல்-ஆண்யானை. அறை-பாறை. அறைக்கவான்; அறையின்கண்; கவான், ஏழாம்வேற்றுமை யுருபு. ஓர்த்தல் - விரும்பியெதிர்பார்த்துக் கேட்டல்; expectantly listen to. கழை- மூங்கில். திரங்குதல்- உலர்ந்து சுருங்குதல்; shrivelling or shrinking up by drying.

அம்மூவனார்] 397 [பாலை

தலைமகனோடு தலைமகளை உடன்போக்கிய தோழி அவனை அவனிடத்துக் கையடைப்படுத்தி ஓம்படை சாற்றியது.

நனைமுதிர் ஞாழற் சினைமருள் திரள்வீ
நெய்தன் மாமலர்ப் பெய்த போல
ஊதை தூற்றும் உரவுநீர்ச் சேர்ப்ப,
தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட்
டன்னா யென்னுங் குழவி போல
இன்னா செயினும் இனிதுதலை யளிப்பினும்
நின்வரைப் பினளென் தோழி;
தன்னுறு விழுமங் களைஞரோ விலரே.

(உரை). முட்டையென்று மயங்கத்தக்க புலிநகக்கொன்றையின் அரும்புமுற்றிய திரண்ட பூவை நெய்தல்மலரின் மீது இட்டுவைத்தாற் போலக் காற்று உதிர்க்குங் கடற்சேர்ப்ப, தாய் வெகுண்டு வருத்தும்போதும் அம்மா அம்மா என்று வாய்விட்டுக் கத்துங் குழந்தையைப் போல, எனது தோழியும் நீ அவளுக்கு இன்னாதன செய்து துன்புறுத்தினும் இனியன செய்து இன்பூட்டினும் நீ குறித்த எல்லையினுள்ளடங்கி நடப்பவளே ஆவள்; தானுற்ற துன்பத்தைப் போக்குபவர் நின்னையன்றி வேறெவருமில்லாதவள்.

சினை - முட்டை. உரவுநீர் - கடல். தலையளித்தல் - தலையளி புரிதல்; அன்பு காட்டல். வரைப்பு - எல்லை. விழுமம்- துன்பம்.

பாலைபாடிய பெருங்கடுங்கோ] 398 [பாலை

தலைவனது பிரிவைத் தலைவிக்கு உணர்த்தி வினைவயிற் பிரிந்த தலைவர் வினைமுற்றி மீளுந்துணையும் ஆற்றியிருத்தல் மாண்புடைமகளிர் செயலாமென்று உலகியலின்மேல் வைத்து உரைத்தாளுக்குத் தலைவி எதிரழிந்து கூறியது.

செற்றா மன்றே, தோழி; தண்ணெனத்
தூற்றுந் திவலைத் துயர்கூர் காலைக்
கயலே ருண்கண் கனங்குழை மகளிர்
கையுறை யாக நெய்பெய்து மாட்டிய
சுடர்துயி லெடுப்பும் புன்கண் மாலை
அரும்பெறற் காதலர் வந்தென, விருந்தயர்பு
மெய்ம்மலி யுவகைமீ னெழுதரு
கண்கலி முழங்குபணி யாக்கு வோரே.

(உரை). தோழீ, குளிரும்படி நீர்த்திவலைகளை வாரித் தூற்றும் (துணைவரைப்பிரிந்து தனித்துறைவார்க்கு) துயரத்தை விளைக்குங் கூதிர்க்காலத்தில் துன்பத்தைத்தரும் மாலைப்பொழுதில் (சேணகன்ற) காதலர் மீள்வரென எதிர்பார்த்து அவருக்குக் காணிக்கைப் பொருளாக (விளக்கித் திரியிட்டு) நெய்வார்த்து மாட்டிய விளக்கை (துயிலினின்று எழுப்பினாற் போல) ஏற்றிவைத்து பெறுதற்கரிய காதலர் வந்ததும் அவருக்கு விருந்தூட்டும்பொருட்டு மெய்யினிடத்து புளகமுதலியவற்றால் வெளிப்படும் மகிழ்ச்சியோடும் மீன்போன்ற எழுதவொண்ணாத அழகினையுடைய கண்கள் செருக்கிய களிப்போடும் ஒலிக்கின்ற ஆபரணங்களையணிந்து தங்களை ஒப்பனை செய்துகொள்ளும் (தலைவரை நெடிது பிரிந்து ஆற்றி உயிர் வாழ்ந்திருந்து) கயல் போன்ற கண்களையும் கனத்த பொன்னாற்செய்த குழைகளையணிந்த காதுகளையும் உடைய மகளிராகிய மனைவிமாரை நாம் வெகுண்டு வெறுப்பேம் அல்லேம். (ஆனால் அத்தகைய வன்னெஞ்சினராகிய மகளிருள் ஒருத்தி அல்லேன் நான்.)

செற்றாம் அன்று - செற்றேம் அல்லேம். செறுதல்-கோபித்தல், வெறுத்தல். கையுறை - காணிக்கையாகக் கொடுக்கும் பொருள். கலி - கலித்தல், செருக்குதல். பணி - அணிகலன், ஆபரணம். மகளிர் பணியாக்குவோர் என்றிணைக்க. இப்பாட்டின் கருத்தை.

அரிதாற்றி, அல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர் - (1160)



செல்லாமை யுண்டேல் எனக்குரை; மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை - (1151)

என்ற திருக்குறள்வெண்பாக்கள் விளக்கிநிற்றல் காண்க.

பரணர்] 399 [மருதம்

தலைமகனது பிரிவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகள் தனதாற்றாமையைத் தோழிக்கு உரைத்தது.

ஊருண் கேணி உண்டுறை தொக்க
பாசி யற்றே பசலை, காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே.

(உரை).எனது மேனியிற் பரந்த பசலை(காதலர் அல்லது, நீர் குடிப்பார்) கையாலே தொடுந்தோறும் அகன்று, விடுந்தோறும் மீண்டு மூடுதலால், ஊரிலுள்ளார் நீருண்ணும் சிறு குளத்தின் துறையிலே ஒன்றுசேர்ந்து பரவிய பாசியைப் போன்றதாய் இருக்கின்றது.

கேணி - சிறு குளம்; இஃதொரு திசைச்சொல்; கொடுந்தமிழ் நிலமாகிய அருவாநாட்டார் வழக்குஎன்ப: (நன்னூல். பெயரியல், 16-வது சூத்திரவுரை.)

பேயனார்] 400 [முல்லை

வினைமுற்றி மீண்ட தலைவன் தனது தேரைக் கடுகச் செலுத்திய தேர்ப்பாகனைப் புகழ்ந்து தலையளித்தது.

சேயாறு செல்லா மாயின் இடரின்று
களைஇக் காமம் பெருந்தோட் கென்று
நன்றுபுரிந் தெண்ணிய மனத்தை யாகி
முரம்புகண் ணுடைய வேகிக் களரிக்
கரம்பைப் புதுவழிப் படுத்த மதியுடை
வலவோய்,
இன்று தந்தனை தேரேர்,
நோயுழந் துறைவியை நல்க லானே.

(உரை). இன்று தூரமான வழியை விரைந்து கடந்து சென்று ஊரைச் சாராவிடின் பெரிய தோள்களையுடைய தலைவிக்குத் துன்பமுண்டாம்படி காமம் மிகுமென்று நினைத்து நலத்தைச்செய்யுங்கருத்தைஉடையையாய்ப் பருக்கைக்கற்கள்செறிந்த மேட்டுநிலம் உடையும்படி தேரைச் செலுத்திச் சேற்றுநிலமாகிய பாழ்நிலத்தில் புதிதாக ஒருவழியை உண்டாக்கிய அறிவுவாய்ந்த தேர்வலவா,காமநோயால் வருந்தி உறைபவளாகிய தலைவியை மகிழ்வித்தலால் அழிந்த அவளது ஆராயத்தக்க அழகை இன்று நீ மீளத் தந்தனை ஆயினாய். (இதற்கு நான் செய்யத்தக்க கைம்மாறெவனோ?)

காமம் என்று - 'காமம் மிகும் என்று' என்று ஒரு சொல் வருவிக்க. நன்று புரிந்தெண்ணிய - எண்ணி நன்று புரிந்த, எனமாற்றுக. முரம்பு-கல்லடர்ந்த மேட்டுநிலம்;'முரம்பு கண்ணுடைந்த நடவை' என்றார் பத்துப்பாட்டினும் (மலைபடு. 432). களரி - சேற்றுநிலம். கரம்பு - பாழ்நிலம். தேர் ஏர் - (வினைத்தொகை) தேரும், தேர்தற்குரிய அழகு. நல்கல் - மகிழ்தல்; இங்கு, மகிழ்வித்தல்.

அம்மூவனார்] 401 [குறிஞ்சி

வேறுபாடுகண்டு அன்னையால் தினைப்புனக்காவலினீங்கி இற்செறிக்கப்பட்ட தலைமகள் தனக்குள்ளே அழிந்து கூறியது.

அடும்பி னாய்மலர் விரைஇ நெய்தல்
நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்
ஓரை மகளி ரஞ்சி ஈர்ஞெண்டு
கடலிற் பரிக்குந் துறைவனொ டொருநாள்
நக்குவிளை யாடலுங் கடிந்தன்
றைதெமக் கம்ம மெய்தோய் நட்பே.

(உரை). அடம்பின் அழகிய மலரை நெய்தல் மலருடன் கலந்து கட்டிய நெடிய பூமாலையைச் சூடிய நீரொழுகுங் கூந்தலையுடைய விளையாட்டுப்பெண்களைக் கண்டு அஞ்சி நண்டு கடலில் ஓடியொளிக்குந் துறைவனான தலைமகனுடன் ஒருநாள் சிரித்து விளையாடுதலும் இனி விலக்கப்பட்டதாயிற்று; அப்படிக்கிருக்க அவனை மெய்யுறத் தழுவிக் கூடுநட்பு இனி அரியதேயாகும்.

பரிக்கும் - பரியும், ஓடும்; இங்கே ஓடியொளிக்கும். கடிந்தன்று - கடிந்தது, கடியப்பட்டது. ஐது - [illegible]ணிது, அற்பமானது; இங்கு,அரியது, 'ஆயிற்று' என்று ஒரு[illegible] வருவிக்க. நக்குவிளையாடலும் கடியப்படவே மெய்தோய் நட்பு இனிக்கிடைத்தல் அரிது என்றவாறும்.

இத்தொகையைத் திரட்டிச் சேர்த்தவன் பூரிக்கோ. இத்தொகையிலுள்ள பாடல்களைப் பாடியபுலவர் திப்புத்தோளார் முதல் அம்மூவனார் இறுதியான இருநூற்றைவர். இத்தொகைப்பாக்கள் பெரும்பாலும் நாலடியைச் சிற்றெல்லையாகவும் எட்டடியைப் பேரெல்லையாகவுங் கொண்டவை. இவற்றைப்பாடிய புலவருள் சிலருடைய பெயர் குறிக்கப்படவில்லை. சிலருடைய இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை; அவர் பாடிய பாட்டிலுள்ள சில சொற்றொடரால் அமைந்த காரணப்பெயர்களே காணப்படுகின்றன.

குறுந்தொகை மூலமும் உரையும் முற்றுப்பெற்றன.

# அப்பர்

## அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்.

### 16. ஓவியமும் கவித்துவமும்.

[965-வது பக்கத்தொடர்ச்சி]

(9) கோயில்களும் கோபுரத் தோற்றமும்

சாலக் கோயி லுளநின் கோயி
லவையென் றலைமேற் கொண்டாடி
மாலைத் தீர்ந்தேன் வினையுந் துறந்தேன்
வானோ ரறியா நெறியானே
கோலக் கோயில் குறையாக் கோயில்
குளிர்பூங் கச்சூர் வடபாலை
ஆலக் கோயிற் கல்லா னிழற்கீ
ழறங்கட் டுரைத்த வம்மானே.

சுந்தரர்.

கோடி நெடு மாளிகை கோபுரங் குளிர்மதி
வடிவுற வமைதர மருவிய வேடகத்
தடிகளை யடிபணிந் தாற்றமி னன்பினால்
இடிபடும் வினைகள்போ யில்லைய தாகுமே.

சம்பந்தர்.

கணங்களாய் வரினும் தமியராய் வரினு
மடியவர் தங்களைக் கண்டால்
குணங்கொடு பணியுங் குலச்சிறை பரவுங்
கோபுரஞ் சூழ்மணிக் கோயில்

மணங்கமழ் கொன்றை வாளரா மதியம்
வள்ளிவண் கூவிள மாலை
அணங்குவீற் றிருந்த கடைமுடி யண்ணா
லாலவா யாவது மிதுவே.
ஷை

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. சம்பந்தர்.

தோற்றுங் கோயிலுந் தோன்றிய கோயிலும்
வேற்றுக் கோயில் பலவுள மீயச்சூர்.
திருமீயச்சூர்—திருக்குறுந்தொகை 1.

வேடஞ்சூழ் கொள்கையீர் வேண்டி நீண்ட
வெண்டிங்கள்
ஓடஞ்சூழ் கங்கையு முச்சி வைத்தீர்
தலைச்சங்கைக்
கூடஞ்சூழ் மண்டபமுங் குலாய வாசற்
கொடித்தோன்றும்
மாடஞ்சூழ் கோயிலே கோயிலாக
மகிழ்ந்தீரே. சம்பந்தர்.

...ரா டுங்கொடி மன்மத வேடனை
நிகரிலா காநெருப் பெழவிழித் தானிடம்
பகரபா னித்திலம் பன்மக ரத்தோடும்
சிகரமா ளிகைதோகுந் தேன்குடித் திட்டையே.
ஷை

எரிசரம் வரிசிலை வளைய வேவிமுன்
திரிபுர மெரிசெய்த செல்வர் சேர்விடம்
வரிவளை யவர்பயில் வைகன் மேற்றிசை
வருமுகி லணவிய மாடக் கோயிலே.
சம்பந்தர்.

காணுமா றரியபெரு மாணுகிக்
காலமாய்க் குணங்கண் மூன்றாய்ப்
பேணு மூன்றுருவாகிப் பேருலகம்
படைத்தளிக்கும் பெருமான் கோயில்
தாணுவாய் நின்றபர தத்துவனை
யுத்தமனை யிறைஞ்சீ ரென்று
வேணுவார் கோடிவிண் ணோர்தமை
விளிப்ப போலோங்கு மிழலையாமே.
சம்பந்தர்.

மாலாயிரங் கொண்டு மலர்க்கண்ணிட வாழி
ஏலாவல யத்தோ டீந்தானுறை கோயில்
சேலாகிய பொய்கைச் செழுநீர்க்கம லங்கள்
மேலாலெரி கட்டும் வீழிமிழ லையே.
ஷை.

நளிரும் மலர்க்கொன்றையு நாறு கரந்தைத்
துளிருஞ் சுலவிச் சுடுகாட் டெரியாடி
மிளிரும் மரவார்த் தவன்மேவிய கோயில்
குளிரும் புனல்சூழ் குரங்காடு துறையே.
ஷை.

மறைமல்கு நான்முகனு மாலுமறி யாவண்ணத்தீர்
கறைமல்கு கண்டத்தீர் கபாலமேந்து கையினீர்!
அறைமல்கு வண்டினங்களாலுஞ் சோலையிடைமரு
நிறைமல்கு கோயிலே கோயிலாக நிகழ்ந்தீரே [தில்
ஷை.

காடுடைச் சுடலைநீற்றர் கையில்வெண் டலையர் தையல்
பாடுடைப் பூதஞ் சூழப் பரமனார் மருத வைப்பில்
தோடுடைக் கைதையோடு சூழ்கிடங் கதனைச் சூழ்ந்த
ஏடுடைக் கமலவேலி யிடைமரு திடங்கொண்டாரே.
திருவிடைமருது - திருநேரிசை—1.

(10) மாட மாளிகை வனப்பு மவற்றின் மாதரேழிலும்.

முடியார் மன்னர் மடமான்
விழியார் மூவுலகும் மேத்தும்
படியார் பவள வாயார்
பலரும் பரவிப் பணிந்தேத்தக்
கொடியார் விடையார் மாடவீதிக்
குடந்தைக் குழாயிரும்
கடியார் சோலைக் கலவ
மயிலார் காரோணத்தாரே.

மலையார் மங்கை பங்கரங்கை யனலர் மடலாரும் [கில்
குலையார் தெங்கு குளிர்கோள் வாழை யழகார் குடமூக்
முலையா ரணிபொன் முளைவெண்ணகையார் மூவா
[மதியினார்
கலையார் மொழியார் காதல்செய்யுங் காரோணத்தாரே.
சம்பந்தர்.

தேடு வார்பிர மன்றிரு மாலவர்
ஆடு பாத மவரு மறிகிலார்
மாட வீதி வலஞ்சுழி யீசனைத்
தேடு வானுறு கின்றதென் சிந்தையே.
திருவலஞ்சுழி - திருக்குறுந்தொகை - 8.

உண்ணிலா வாவியா யோங்குதன் றன்மையை
விண்ணிலா ரறிகிலா வேதவே தாந்தனார்
எண்ணிலா ரேழின்மணிக் கனகமா ளிகையிளந்
தெண்ணிலா விரிதருந் தென்குடித் திட்டையே.
சம்பந்தர்

சண்டனைநல் லண்டர்தொழச் செய்தான் கண்டாய்
சதாசிவன் கண்டாய் சங்கரன் றான்கண்டாய்
தொண்டர்பலர் தொழுதேத்துங் கழலான் கண்டாய்
சுடரொளியாய்த் தொடர்வரிதாய் நின்றான் கண்
[டாய்
மண்டுபுனற் பொன்னி வலஞ்சுழியான் கண்டாய்
மாமுனிவர் தம்முடைய மருந்து கண்டாய்
கொண்டறவழ் கொடிமாடக் கோட்டை யூரில்
கோடீச் சரத்துறையு கோமான் றானே.
திருக்கோட்டையூர் - திருத்தாண்டகம் 6.

நோம்பைந்து புடைத்தோல்கு நூபுரஞ்சேர் மெல்லடி
அம்பந்தும் வரிக்கழலு மாவஞ்செய் பூங்காழிச் [யார்
சம்பந்தன் றமிழ்பகர்ந்த சாய்க்காட்டுப் பத்திணையும்
எம்பந்த மெனக்கருதி யேத்துவார்க் கிடர்கெடுமே.
சம்பந்தர்.

பறையோடு சங்க மியம்பப் பல்கொடி சேர்நெடு மாடம்
கறையுடை வேல்வரிக் கண்ணார் கலியோலி சேர்
[கடம்பூரில்
மறையொலி கூடிய பாடல் மருவி நின்றாடன் மகிழும்
பிறையுடை வார்சடை யானைப் பேணவல்லார் பெரி
[யாரே.
ஷை.

தளருங் கோளர வத்தொடு தண்மதி
வளருங் கோல வளர்சடை யார்க்கிடம்
கிளரும் பேரிசைக் கின்னரம் பாட்டருக்
களருங் கார்க்கடம் பூர்க்கரக் கோயிலே.
திருக்கடம்பூர் - திருக்குறுந்தொகை 1.



வெண்கோடி மாடமோங்குவிறல்வெங்குருநன்னகரான்
நண்பொடு நின்றசீரான் றமிழ்ஞான சம்பந்தனல்ல
தண்குடமூக் கமர்ந்தானடிசேர் தமிழ் பத்தும் வல்லார்
விண்புடை மேலுலகம் வியப்பெய்துவர் வீடெளிதே.
சம்பந்தர்.

திங்களம் போதும் செழும் புனலுஞ்
செஞ்சடை மாட்டயல் வைத்து கந்து
நங்கண் மகிழுநள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல் சொல்வாய்!
பொங்கிள மென்முலை யார்க ளோடும்
புனமயி லாடநி லாமு ளைக்கும்
அங்கழகச் சுதை மாடக் கூடல்
ஆலவா யின்க ணமர்ந்த வாறே.
சம்பந்தர்.

(11) பூஞ்சோலைகளும் பொழில்களும்.

உறைவ னாய்நிறைந் துள்ளங் குளிர்ப்பவன்
இறைவ னாகிநின் றெண்ணிறைந் தானவன்
நறவ நாறும் பொழிற்றிரு நள்ளாறன்
மறவ னாய்ப்பன்றி பின்சென்ற மாயமே.
திருநள்ளாறு—திருக்குறுந்தொகை 5.

ஞான மல்கு மனிதர்க ளொடொறும்
ஏல மாமல ரோடிலை கொண்டுநீர்
கால னார்வரு தன்முன் கருவிலிக்
கோலவார் பொழிற் கொட்டிட்டை சேர்மினே.
பங்க மாயின பேசப் பறைந்துநீர்
மங்கு மாநினை யாதே மலர்கொடு
கங்கை சேர்சடை யான்றன் கருவிலிக்
கோங்கு வார்பொழில்*கொட்டிட்டைசேர்மினே.
உய்யு மாறிது கேண்மி னுலகத்தீர்
பைகொள் பாம்பரை யான்படை யார்மழுக்
கையி னானுறை கின்ற கருவிலிக்
கோய்கோள் பூம்பொழிற் கொட்டிட்டை சேர்மினே.
திருக்கொட்டிட்டை-திருக்குறுந்தொகை-2,35.

செய்பூங் கொன்றை கூவிளமாலை
சென்னியுட் சேர்புனல் சேர்த்திக்
கொய்பூங் கோதை மாதுமை பாகங்
கூடியோர் பீடுடை வேடர்
கைபோ ளன்ற கனிகுலை வாழைக்
காய்குலையிற் கமுகீனப்
பெய்பூம் பாளை பாய்ந்திழி தேறல்
பில்கு பெருந்துறை யாரே.
சம்பந்தர்.

ஊனுலா முடைகொ ளாக்கை யுடைகல
மாவ தென்றும்
மானுலா மழைக்க ணார்தம் வாழ்க்கைபை
மெய்யென் றெண்ணி
நானெலா மினைய கால
நண்ணிலே னென்ன மில்லேன்

---

* தாங்கோல வெள்ளெலும்பு பூண்டுதம் மேறேறிப்
பாங்கான வூர்க்கெல்லாம் செல்லும் பரமனார்
தேங்காவி னாறுந் திருவாரூர்த் தென்னகரிற்
பூங்கோயி லுண்மகிழ்ந்து போகா திருந்தாரே.
திருவாரூர்-பண்-சீகாமரம் 5.

தேனுலாம் பொழில்கள் சூழ்ந்த
திருக்கொண்டீச் சரத்து ளானே.
திருக்கொண்டீச்சரம்—திருநேரிசை 6.

தொழுதகம் குழைய மேவித் தோட்டிமை யுடைய
[தொண்டர்
அழுதகம் புகுந்து நின்று ரவரவர் போலு மாரூர்
எழிலக நடுவெண் முற்ற மன்றியு மேர்கொள் வேலிப்
பொழிலகம் விளங்கு திங்கட் புதுமுகிழ் சூடி னாரே.
திருவாரூர் - திருநேரிசை 3:

ஆதியிற் பிரம னார்தா மர்ச்சித்தா ரடியி ணைக்கீழ்
ஓதிய வேத நாவ ருணருமா றுணர லுற்றார்
சோதியுட் சுடராய்த் தோன்றிச் சொல்வினை யிறந்தார்
[பல்பூக்
கோதிவண் டறையுஞ்சோலைக் குறுக்கைவீரட்டனாரே.
திருக்குறுக்கை - திருநேரிசை 1.

பிறைதருசடையின் மேலே பெய்புனற் கங்கைதன்னை
யுறைதர வைத்த வெங்க ளுத்தம னூழி யாய
நிறைதரு பொழில்கள் சூழ நின்றநெய்த் தான மென்று
குறைதரு மடிய வர்க்குக் குழகனைக் கூட லாமே.
திருநெய்த்தானம் - திருநேரிசை 3.

... வா திரிந்து நாளுங் கருத்தினு னின்றன் பாதங்
கொண்டிருந் தாடிப் பாடிக் கூடுவேன் குறிப்பி னாலே
வண்டுபண் பாடுஞ் சோலை மல்குசிற் றம்ப... ...த்தே
யெண்டிசை யோரு மேத்த விறைவநீ யாடு மாறே.
கோயிற்றிருநேரிசை - 5

முதற்றனிச் சடையை மூழ்க முகிழ்நிலா வெறிக்கும்
[சென்னி
மதக்களிற் றுரிவை போர்த்த மைந்தரைக் காண லாகு
மதர்த்துவண் டறையுஞ்சோலை *மல்குசிற் றம்பலத்தே
கதத்ததோ ரரவ மாடக் கனலெரி யாடு மாறே.
கோயிற்றிருநேரிசை 7.

மேற்கண்ட மேற்கோள்களில், சிற்பம் ஓவிய முதலியனவற்றின் கலையிலக்கண மிதுதானென்று காட்டும் வாக்கியங்களில்லையாயினும் இரண்டுமூன்று மேற்கோள்களிலுள்ள சொற்றொடர்கள் சிலவற்றை நாம் ஒருங்குசேர்த்துக் காண்போமாயின் இயற்கைக் காட்சிகள் நாம் பிரத்தியட்சத்தில் கண்டனபோல் காணப்படும். இவ்வியற்கையின் அழகு சிவபெருமான் திருமேனிபோல் விளங்குவதால் இயற்கையழகே கடவுளழகாய் நமது ஊனக்கண்ணுக்கு உணரலாகு மென்பது திண்ணம். இதைத் திருநாவுக்கரசரும்,

சுற்றிவண் டியாழ்செய்யும் சோலையும்
காவுந் துதைந்திலங்கு
பெற்றிகண் டால் மற்றி யாவருங்
கொள்வர் பிறரிடை நீ
யொற்றிகொண் டாயொற்றி யூரையுங்
கைவிட் டுறுமென்றெண்ணி
விற்றிகண் டாய்மற் றிதுவொப்ப
தில்லிடம் வேதியனே.
திருவொற்றியூர் - திருவிருத்தம் 8.
என்று இனிதின் பாடினர்-

---

*இப்பதிகத்தில் வரும் "மஞ்சடை சோலை" "நாறுபூஞ் சோலை" முதலிய சொற்றொடர்களை நோக்குக.

## நம்மாழ்வார் வைபவம்.

### திருவாய்மொழி.

[968-வது பக்கத் தொடர்ச்சி]

2-ம் பத்து 6-ம் தசகம்.

5-ம் பாசுரம்.

உய்ந்து போந்து என் உலப்பிலாத
வெந்தீவினைகளை நாசம் செய்துன
தந்த மில்லடிமை
யடைந்தேன். விடுவேனோ?
ஐந்து பைந்தலை யாடரவணை மேவிப்
பாற்கடல் யோக நித்திரை
சிந்தை செய்த வெந்தா யுன்னைச்
சிந்தை செய்து செய்தே.

பதக் குறிப்புக்கள்:—உலப்பில்லாத - முடிவில்லாத, வெந்தீவினைகள் - குரூரமான பாபத்திற்குள் செலுத்தும் கர்மங்கள், அடிமை-தாஸன் செய்யும் குற்றேவல்கள்-இந்தத்தொண்டை வைணவர்கள் "கைங்கரியம்" என்று பெயர் சாற்றுவார்கள். இக் கைங்கரியம் பகவானுக்கும் அவன் அடியார்களுக்கும் உரியது ஆகும். இவ்வுரிமையை நன்கடைந்து மனிழ்ந்து செய்து நிற்றலே வைணவர்களின் மோக்ஷஸ்வரூபத்தில் முக்கிய அம்சமாகிறது. ஆநந்தப் பேரின்பமாய் வைகுண்டத்தில் அநுபவிப்பது மற்றொரு அம்சம். ஐந்து பைந்தலை - ஆதிசேஷனுக்கு ஆயிரம் தலைகளாயினும் சிற்சில அவசரத்தில் ஐந்து தலைகளை ஏற்றிருப்பதுமுண்டு. ஆடு அரவணை - பகவானோடு நித்தியமாய்க் கலந்துகொண்டிருப்பதாலே ஸந்தோஷத்தால் ஆதிசேஷன் ஆடிக் களிப்பதாகத் திருவுள்ளம்.

உரை:—உன்னை எப்பொழுதும் அநுபவிப்பதால் களித்தாடுகிற திருவனந்தாழ்வான்மேல் கண்வளர்ந்து யோகம்செய்துகொண்டிருக்கின்ற உன்னை யநுபவிக்கப்பெற்று உன்னை யணுகி என்னுடைய பெரியதான துக்கங்களைப்போக்கி உன்னடிமையாகும் அந்தமில்லாத பெரும்பேற்றை அடைந்த நான் இனி விடுவேனோ.

விசேஷக்குறிப்பு:—பகவான் யோகநித்திரை செய்தலாவது—உலகங்களைக் காத்தளிக்கவேண்டிய முயற்சியில் சிந்தித்திருக்கை. அர்ச்சுனன் மஹாபாரத யுத்தத்திற்குமுன்பு கிருஷ்ணபகவானைப் பாண்டவர்களுக் குதவியாய் அமைத்துக் கொள்ளவேண்டிப் பிரார்த்திக்கப் போனபோது, ஸ்ரீகிருஷ்ணன் யோகு புரிந்துகொண்டு வீற்றிருக்கக்கண்டு வாளாவிருந்தான். பகவான் கண்திறந்ததும் அர்ச்சுனன், 'நீவிர் எதற்காக என்னயோகம் செய்தீ' ரென்றும், உமக்கும் யோகம் அவசியமோ, வென்றும் வினவ-பகவான் தாம் லோக ரக்ஷணத்தின்பொருட்டு யோகம்புரிந்து சிந்தையில் பல கருத்துக்களைச் சங்கல்பித்ததாக விடை அளித்தது இங்கு உணரற்பாலது. தம்முடைய அளவிடக்கூடாததான மஹிமைபொருந்திய மங்கள குணங்களைத் தாமே தம் திருவுள்ளத்தில் நினைந்ததாக யோகத்திற்குப் பொருள்கொளினும் அமையும். பூர்வாசாரியார்கள் இப்படிக் கருதிப் பொருள் உரைத்திருக்கின்றார்.

---

6-ம் பாசுரம்.

உன்னைச் சிந்தை செய்து செய்துன்
நெடுமா மொழியிசை பாடியாடி என்
முன்னைத் தீவினைகள்
முழுவே ரரிந்தனன் யான்
உன்னைச் சிந்தையினு லிகழ்ந்த
விரணியனை மார்வம் கீண்ட
என்முன்னைக் கோளரியே
முடியாததென் எனக்கே.

"இப்படி யுன்னை ஸர்வ காரணங்களாலும் அநுபவித்து என்னுடைய ஸமஸ்த பிரதிபந்தங்களையும் போக்கினேன். ஆச்ரிதர் உன்னை வேண்டுவதற்கு முன்பு அவர்களது இஷ்டத்தை முடித்துக்கொண்டிருக்கும் சுபாவனுனவனே! எனக்கு முடியாததென்? இந்த ஸமர்த்தியெல்லாம் உன்னுடைய அருளாலே விளைந்தது" என்கிறார்

குறிப்பு:—இங்கே ஹிரணியன் மார்பைப் பிளந்தது, பக்தனை ப்ரஹலாதனைக் காப்பாற்றும் நிமித்தம்பற்றி என்று திருவுள்ளப்பட்டு உரைத்தபடி. உடனே நரசிம்மாவதாரம் எடுத்துப் பக்தனுக்கு உதவாமலிருந்தால் வாளை உருவிநின்ற ஹிரணியன், "ஹரி"தான் ஸர்வலோகங்களுக்கும் ரக்ஷகனென்று சித்தாந்தம் கொண்ட தன்மகனை ஸம்ஹரித்திருப்பான். ஆகையால் இவ்விடத்தில் நரசிம்மாவதாரத்தின் காரியத்தை எடுத்துக்கூறியது வெகு பொருத்தமென் றறிக.

---

7-ம் பாசுரம்.

முடியாத தென்னெனக்கேல் இனிமுழு
வேழுலகு முண்டான் உகந்துவந்
தடியேனுள் புகுந்தா
னகல்வானு மல்லனினி
செடியார் நோய்களெல்லாம்
துரந்தெமர் கீழ்மே லெழுபிறப்பும்
விடியாவெந் நரகத்தென்றும்
சேர்தல் மாறினரே.

பொழிப்புரை:—எல்லா லோகங்களையும் பிரளய காலத்தில் தன் திருவயிற்றில் வைத்து ரக்ஷித்த மஹான், தாஸனை என்னுள் புகுந்தான். அவன் அகல்வானுமல்லன். அதாவது என்னைவிட்டுப் பிரிய இஷ்டமில்லாதவனுயிருக்கிறன். இவ்வளவு மாத்திரமோ! என்னிடத்தில் அவன் கூர்ந்த அன்பாகிற வெள்ளம் என் ஏழு தலைமுறை முன்னோர்களிடத்திலும் பாய்ந்து அவர்கள் இந்த லோகத்தில் பூர்வ கர்மாக்களால் பீடிக்கப்பட்டிருந்தவர்களைப் பாபங்களிலிருந்தும் நிவர்த்திசெய்து நிஜமான நரகத்தைக் காட்டிலும் கொடூரமான ஜந்மமாகிற ஸம்ஸாரத்திலிருந்தும் விடுவித்துவிட்டது. இப்படி அவன் அருள் பெற்ற எனக்கு முடியாதது என்ன இருக்கிறது.

"மாறி மாறி, உன்னோடு கலவிக்கு விரோதியான ஸம்ஸாரத்தின்கண் நான் இருக்கையிலே உனது அருளால் உன் திருவடிகளையடைந்தேன். அவற்றிலே உள்ளந்தேறி முடிவில்லாததும் நாசமற்றதுமான இன்பவெள்ளத்தில் யான் முழுகினேன். ஆச்ரிதர்களைக் காப்பாற்றும்பொருட்டே கெருடவாகனமேறிப் பக்தரான தேவதைகளின் விரோதிகளான அசுரர்களைத் துரத்துகிற சுபாவமுள்ள நீ ஆச்ரிதனுன தாஸனை விட்டு நீங்கவொண்ணுது" என்று பிரார்த்திக்கிறார்.



விசேஷக்குறிப்புக்கள்:-இதுவரையில் ஆழ்வார், தாம் பகவானை விடமாட்டேனென்று அவனுக்கு உறுதி சொல்லி வற்புறுத்தினவர் அவனை இப்பாசுரத்தில், "நீ என்னை விட்டு அகலாதிருக்கவேண்டு" மென்று அபேக்ஷிக்கிறது எப்படியெனில்—பகவான் இவர் சொன்ன உறுதிவாக்கால் நிச்சயபுத்தி அடைந்து, "நமக்குத்தான், இவர் அன்பு ஸ்திரமாயிருக்கிறதே இனி நாம் கவனித்தல்வேண்டிய பல விஷயங்களிலும் ஊடாடிச் செல்லலாம்" என்று அத்துறைகளில் சென்று இழிந்து தம்மைத் துறந்தால் என்ன செய்வது என்ற சங்கை, ஆழ்வாரைத் தூண்டத் தன் பயத்தை நீக்கிக்கொள்ளும் பொருட்டுப் பகவானை நீங்கேலென்று விண்ணப்பம் செய்கிறார்.

---

8-ம் பாசுரம்.

மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்தடியை
யடைந்துள்ளந் தேறி
ஈறிலின்பத் திருவெள்ளம்
யான் மூழ்கினன்
பாறிப்பாறி யசுரர்தம் பல்குழாங்கள்
நீறெழப் பாய்பற வையொன்
றேறிவீற் றிருந்தா யுன்னை
யென்னுள் நீக்கே லெந்தாய்.

பொழிப்புரை:—அசுரர்களுடைய பலவாகிய கூட்டங்களை நீறுகும்படி சிதைத்துப் பாய்கின்ற கருடாழ்வார்மீது வீற்றிருக்கின்றவனே, மாறிமாறிப் பலவகைகளான சன்மங்களை யெடுத்து உன்னுடைய பாதங்களைச் சேர்ந்து மனம் தேறி, முடிவில்லாத இன்ப சாகரத்துள் ஆழ்ந்திருக்கின்றேன்; என் தந்தையே, உன்னை என் உள்ளத்திலிருந்து நீக்கிக் கொள்ளாதே.

---

9-ம் பாசுரம்

எந்தாய் திருவேங் கடத்துள் நின்றாய்
இலங்கை செற்றாய் மராமரம்
பைந்தாளே ழுருவவொரு
வாளி கோத்த வில்லா
கொந்தார் தண்ணந் துழாயி னுயமுதே
உன்னை யென்னுள்ளே குழைத்தவெம்
மைந்தா வானேறே
யினியெங்குப் போகின்றதே.

பொழிப்புரை:—"திருமலையிலே நின்று உலகஜனங்கள் உன்னைப் பூஜித்து உலக அருளின்படியையும், உன்னுடைய ராமாவதாரமுதலாய அவதாரங்களையும் வைகுண்ட நாயகனுயிருந்தும் உன்னுடைய மேல் கண்ட ஸௌலப்பியத்தாலே எனக்கு வெகுரஸமாயும் இன்பமாயும் அநுபவிக்கச்செய்தவனே, என்னுள்ளே உன்னைக் குழைத்து நீயும்நானும் ஏகரஸமாய் அநுபாவியமானபிறகு நீ இனிமேல் எங்கே போவது? போவேனென்று எத்தனித்தாலும் உன்னால் போக முடியுமோ.' என்கிறார். சென்றபாசுரத்தில், என்னை நீ நீக்காமலிருக்கவேண்டு" மென்று பிரார்த்தித்தவர் இப்பாசுரத்தில் அவனாலும் தம்மை நீக்கவொண்ணாது என்று மனந்தேறிக் கூறுகிறார்.

---

10-ம் பாசுரம்.

போகின்ற காலங்கள் போய காலங்கள்
போகு காலங்கள் தாய்தந்தையுயி
ராகின்ற யுன்னைநா
னடைந்தேன் விடுவேனோ
பாகின்ற தொல்புகழ் மூவுலகுக்கும்
நாதனே பரமா தண்வேங்கட
மேகின்றாய் தண்டுழாய்
விரைநாறு கண்ணியனே.

பொழிப்புரை:—முக்காலத்திலும் எனக்குத் தாய் தந்தை செய்யும் நன்மைகளெல்லாம் நீ எனக்குச் செய்தருளினாய், அருள்கின்றாய், இனியும் அருளப்போகின்றாய். நான் எனக்காகச் சுயநயத்தாலே செய்துகொள்ளக்கூடிய நன்மைகளையும் நீயே தேடிச் செய்து வருகிறாய். ஸர்வலோகங்களுக்கும் நாதனான நீ, யான் சுலபமாய் அடைந்து பூஜிக்கும்படி திருமலையிலேகோயில்கொண்டு நித்தியவாஸம் செய்கின்றாய். உன்னை உன்னருளால் நான் அடைந்துவிட்டேன். இனி விடுவது இல்லை. நீயும் விடவொண்ணாது.

விசேஷக் குறிப்பு:—முன்பாட்டுக்களில் சொன்னதையே இப்பாசுரம் வற்புறுத்துவதாகத் தோன்றுகிறது. இப்படி வற்புறுத்த ஒரு ஹேது உண்டு. பகவான் ஆழ்வாரை விடவொண்ணாது என்றார்; தாம் அவனை விடுவதில்லை யென்றுந் தாமே அறுதியிட்டுவிட்டார்; ஆயினும் வேறு எக்காரணத்தாலேனும் பிரிவு ஏற்படாதோ என்று ஒரு சங்கை உதிக்கலாம். அந்தச் சங்கையை அகற்றி, எந்தக் காரணத்தாலும் அவனுக்கும் தமக்கும் பிரிவுஏற்பட நியாயம்காணோம் என்று இப்பாசுரத்தில் அறுதியிடுகிறாரென்று நாம் பொருள் கொள்ள வேண்டும்.

---

11-ம் பாசுரம்.

கண்ணித் தண்ணந் துழாய்முடிக்
கமலத் தடம்பெருங்
கண்ணனைப் புகழ்நண்ணித் தென்குருகூர்ச்
சடகோபன் மாறன் சொன்ன
எண்ணில் சோர்விலந் தாதியாயிரத்
துள்ளிவையு மோர்பத் திசையொடும்
பண்ணில் பாடவல் லாரவர்
கேசவன் தமரே.

பொழிப்புரை:—எம்பெருமானுடைய சுவரூப குண விபூதிகளை உள்ளபடியே அநுபவித்து, அநுபவித்தபடியே சொன்னவித் திருவாய்மொழியை இசையோடு பண்ணிலே பாடவல்லாருக்குக் கேசவன்தமர் என்கிற நற்கதியும் பேரும் ஸம்பவிக்கும்.

குறிப்பு:—அச்சத்தாலேனும் அநர்ஹதா நோக்கத்தாலேனும் தாம் பகவானை விடமாட்டேனென்று கூறவந்தவர் நடுவே அவன் புகழை பரக்கப் பேசுவது க்ஷேம பூர்ணமென்று கொள்ளவேண்டும்.

# வேண்டல் வளர்த்த மரம்

## ஒரு சிறு கதை

சங்கரபுரமென்பது ஒருசிறு கிராமம். பிரயாணிகளின் போக்குவரவு நடைபெறும்பொருட்டு மோட்டார் 5-ம் ஓடுகின்றனவெனினும், இன்னும் அவ்வூரில் [illegible]ற்குரிய அமைதியின்மை பரவவில்லை. இப்பொழுதுதான் அல்லல்பலவற்றிற் கோர் வித்தெனப் பஞ்சாயித்துச் சபையொன்று அங்குத் தோன்றியுள்ளது. இச்சிற்றூரில் கடைக்கார அரங்கன் என்னும் ஒரு எளியவன் இருந்தான். பட்டம்மாள் என்பவள் அவ்வரங்கனது நன்மனைவி. ஈசனது நல்லருளால் ஐந்துவயதுடைய ஒரு பெண்மகவும் வயது இரண்டும் எய்தப்பெறாதவொரு ஆண்மகவும் அவர்கள் பெற்றிருந்தனர். புருஷனும் மனைவியும் 'போதும்' என்ற நன்னினைவிற் செறிந்தனராய் மனையறம்நடத்தி வாழ்ந்த அவர் நல்வாழ்வு 'வறுமையிற் செம்மை'யெனும் அறவுரையோடியைந்து துளங்கிற்று. இன்னபடி, போதுமெனும் நினைவினோடு கொஞ்சுகிளியன்ன அஞ்சொற் குதலை மக்களிடைக் குழைந்தொழுகிய அவர் வாழ்க்கை யழகு குலையவேண்டுமென்பது [illegible] விதியின் வன்மைதானோ, [illegible]ற்றுக் கடவுள் செய்த சோதனையோ, தெரியவில்லை.

உணவருந்திய பின் ஓரிரவு திங்களொளி வெண்ணிலவில் மக்கள்சொரி மழலையமுதுண்டு புருடனும் மனைவியும் உள்வாய் முன்றத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அற்றைநாள் அடிசிலின் சுவை பற்றித் தொடங்கிய அவர் பேச்சு, மெல்லமெல்லக் கடையென்றும், வியாபாரமென்றும், அயலகத்து இராமனது மக்கள் அணிந்திருக்கும் நகையென்றும் தொடர, அது அந்தந்தில் நாளைக்கெனச் சிறிது கைப்பொருள் சேமிக்க வேண்டுமெனும் விழைவினிலே முடிந்தது. முடிந்த அம்முடிவினில் முன்னிருந்த மகிழ்ச்சியும் மடியலாயிற்று.

அமைதியுடன் மகிழ்ச்சியும் கடைக்கார அரங்கனது மனமிருந் தகன்றுவிடத் தன்னுடைய மனையாளை நோக்கிப் "பெண்ணே,என் மூதாதைகள் சிறிது பணக்காரர்கள். என் தந்தையார் காலத்தில்தான் எங்கள் குடும்பம் வறுமையுற்றது. நானும் பதினைந்து வருடங்களாகக் கடைவைத்துள்ளேன். என்னபயன்? அயலகத்து இராமன் தையற்கடையொன்று வைத்து ஐந்து வருடங்களே ஆகின்றன. மூவாயிர ரூபாய் வட்டிக்கு விட்டிருக்கின்றான். அவன் குழந்தைகள் நகை போட்டுக்கொண்டிருக்கின்றனர். எனவே நான் சிறிது வியாபாரத்தைப் பெருக்க எண்ணியுள்ளேன். நேற்று நமது கடைக்குவந்த வள்ளுவப்பண்டாரமும் எனக்கு நல்லகாலம் வரப்போகின்றது என்று சொல்லியுள்ளான். ஒரு சிறிது பொருளீட்டி நாம் சுகமாய் இருப்பதுமல்லாமல் எங்கள்குலம் பழையபடி சிறப்பெய்தவும் செய்து விடலாம்" என்று ஆர்வமொடு உரையெறிந்தான்.

மூலதனத்தினும் கோலஞ்செய் அணிகலன்களே பட்டம்மாள் மனத்துள் நனிமிகச் சுவைத்தன. எனினும் நகைபாய்ச்சும் படுகுழியில் அவள் முற்றும் இழிந்துவிடவில்லை. அயல்வீட்டுத் தையற்கார இராமன் கடந்த விரண்டுஆண்டுகளாகக் கோர்ட்டும் கையிற் பத்திரக்கட்டுமாயிருப்பது அவள் நினைவிற்கு வந்தது. வந்ததும், கணவனை நோக்கியவளாய், "ஐய,மூலதனம்சேமிப்பது எளியதாய் இருக்கலாம்; என்றாலும் அதை வைத்துக் காத்துவளர்ப்பது கஷ்டமென்றே தோன்றுகின்றது. மூலதனம் இராமனுக்கு ஒரு சுகத்தையும் தரவில்லை என்றே எண்ணுகின்றேன். நேற்று அவன்மனைவி பார்வதி நம்வீடு வந்தாள். தன் புருடன் ஒய்வில்லாது அலைகின்றான் என்றும், மாதத்தில் பதினைந்துதினங்கள் புருடன் கோர்ட்டுக்காரியமாய்ப் போய்விடுகின்றான் என்றும், வீட்டில் வந்தால் சிடுசிடு என்றவண்ணமாயிருக்கின்றான் என்றும், இரண்டுவருடத்திற்குமுன் வீட்டில் இருந்த இன்பத்தை இந்த மூலதன முயற்சி போக்கிவிட்டதென்றும் கூறினாள்......" என்று முடிக்குமுன், அவன் இடைப்புகுந்து "பெண்ணே, அவன் அதிகவட்டிக்கு ஆசைப்பட்டுக் கண்டவர்களிடத்தில்பணத்தைக் கொடுத்துவிடுகின்றான். அவனைப்போல் பேராசை [illegible]தவர்கள் கஷ்டந்தான் படுவார்கள். நல்ல நாணயமாய் முக்கால்வட்டிக்குச் சொத்தின்மேல்கொடுத்தால் ஒரு அல்லலுமில்லை"யென்றான். பணமென்னும் பிசாசின்கைப்பட்டார் இழியும் முதற்படியிதுவே. பட்டம்மாளுக்குமாத்திரம் இது முழுதும் ஏற்பதற்குரியதாகப்படவில்லை. சிந்தனையிலாழ்ந்தாள். அவள் மனத்தினில் இரண்டு தினங்களுக்குமுன் சங்கரபுரக்கோயிலில் ஒரு பெரியார் செய்த புராணப் பிரசங்கத்தின் நினைவு வரலாயிற்று. வரவும் 'ஐய, அன்று பிரசங்கம் செய்த பௌராணிகர், கிணற்றுத்தவளைக்கும் கல்லிற்குட் தேரைக்கும் படியளக்கும் எம்பிரான் நமக்கும் அளிக்கும் என்று சொன்னாரே. நமக்கு இதுவரை ஈந்தளித்தவர் இனியும் வேண்டுவதுதெரிந்து உதவாரோ?" என்று கணவனுக்குக் கூறினாள்.

"பெண்ணே, நமக்கும், மற்ற ஜீவன்களுக்கும் வித்தியாசமுண்டு. ஓரறிவு ஈரறிவு பெற்றவைகளுக்கு அவன் அளிப்பான். ஆறறிவு பெற்ற நாம், கைகால்களையும் படைத்துள்ளோம். நாம் சும்மாவிருந்தால் கடவுள் நம்மைச் சோம்பேறி என்று கைவிடுத்துக் காப்பாற்றமாட்டான். நான் கடைவைத்துப் பாடுபடாவிட்டால் அவன் நமக்குச் சோறுபோட்டுவிடுவானோ. நமது புத்தியையும் கைகால்களையும் உபயோகப்படுத்தி நாம் நமது உணவையும் உடையையும் தேடிக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான் கடவுள் துணை புரிவான். நோயுற்றவர் விதியென்று சொல்லிச் சும்மா இருக்கின்றார்களா ? இந்தப் பொருளில்தான் அந்தப் பிரசங்கியாரும் பேசியுள்ளார். அவரும் காசுக்குத்தானே கதைகளைச் சொல்லிச்சொல்லிக் கதறுகின்றார். அவர் சும்மா வீட்டிலே இருந்தால் பணம்வந்து மடியிலே விழுமா."

இந்தஉபதேசம் உத்தமிபட்டம்மாள்மனத்தில் ஊன்றிவேர்விடலாயிற்று. அவ்வமயம் மடியில் தூங்கிக்கொண்டிருந்த ஆண்குழந்தை, தன் வாயிலிருந்த சிறு கையைத் எடுத்துத் தாயின்கழுத்திலேபோட, அக்கையை அருமையுடன் அவள் முத்தமிட்டு, 'இரண்டுபவுனில் ஒரு காப்புப் போட்டால் நன்றாயிருக்கும் இச்செல்வக் கரங்களுக்கு. ருக்மாவிற்கு ஒரு மூக்குத்தியும்



வேண்டும். அது அதிகம் ஆசைப்படுகின்றது என்று, சொல்லிப் பின் "என் கைக்காப்பும் தேய்ந்துவிட்டது" என்று முடித்தாள்.

இதைக்கேட்டு அதிகமும் மகிழ்ந்தவனாய் "நீ மிகுந்த புத்திசாலி. நான்கூறிய விஷயங்களின் உண்மையைத் தெரிந்துகொண்டாய். புத்தகமும் பேப்பரும் படித்தால் ஆய்விட்டதா, புத்திசாலித்தனம்வேண்டும். இராமன்மனைவிதான் ஆகட்டும்,மற்று எந்தப் படித்தபெண்தானாகட்டும், நான்சொன்ன பெரிய விஷயங்களை ஒருமுறையில் தெரிந்துகொண்டிருக்கமாட்டார்கள். நான் எளியகடைக்காரனொருவன்தான். என்றாலும் எங்கள் குலத்தவர்கள் பெரிய படிப்பாளிகளாம். எனதுபாட்டனார் கவிபாடுவாராம். எனக்கு அவ்வளவு படிப்பில்லாவிட்டாலும் குலத்தினது புத்திசாலித்தனம் இரண்டு தலைமுறையில் தேய்ந்துபோகுமா!என்தகப்பனாருக்கும் பட்டணத்தார் தாயுமானவர் பாட்டுக்களும், தேவாரத்தில் பாக்களும் நன்றாகப் பாடத்தெரியும். எனக்கும் விவேக சிந்தாமணியும், குமரேச சதகமும், சித்தர் பாட்டுகளும் தெரியும் இராமனுக்குத் தெரியுமா? உள்ளூர் முதலியார் தனவந்தர்தான், ஆனால் கையெழுத்துப் போடத்தெரியாது' என்று தனது குலத்தின் பெருமையிலும் புலமைமரபிலும் மதர்க்கும் அரங்கன், மூக்குத்தியையும், தேய்ந்துபோன காப்பையும் மறந்துவிட்டு ஆர்வமோடு மனைவியைத்தழுவி ஆழவொரு முத்தமிட்டான். தேய்வுற்ற அவள் பொற்காப்பு அப்பொழுது அவன் தோளைக்கீற, உடனே மனைவியின் உரை ஞாபகத்திற்கு வந்தது. வந்ததும் மகிழ்ச்சியுடன் தன் வாய்பார்த்திருந்த மனைவிக்கிது கூறினான்.

"பெண்ணே, நாளை மறுதினம் சிறுகளத்தூரில் பெரிய சந்தை. அங்கு மலிவாகச் சரக்கு வாங்கிவரப் பணம் சேகரித்துவிட்டேன். என்கையில் ஐந்நூறு ரூபாய் இருந்தது. ஐந்நூறு ரூபாய் உள்ளூர் முதலியாரிடமிருந்து வாங்கியுள்ளேன். சங்கராந்தி வரப்போவதால் துணிக்கடையும் துவக்கப்போகின்றேன். நமக்கு நல்ல இலாபம் கிடைக்கும். உனக்குக் காப்பும், குழந்தைகளுக்கு நகையும் சங்கராந்திக்குள் பண்ணித் தருகின்றேன்".

இப்படிப்பேசிய அவ்விருவோரு மினி வரவிருக்கும் நலத்தினிலே மனம்வைத்தனராய்த் துயில்கொண்டனர்.பொழுதுவிடிந்ததும் அரங்கன் சந்தைக்குப்பிரயாணமானான்.மனைவி, இன்று போகவேண்டா என்றாள். "பெண்ணே அபசகுனம்போல் வேண்டா வென்கின்றாயே' என்று அரங்கன் கோபித்துக்கொண்டான். அவள் "இரவில் நான் ஒரு கனவுகண்டேன். அக்கனவினில் ஐய, உன் மயிரெல்லாம் நரைக்கவும், உன்னை இருவர் கட்டியிழுத்துச் செல்லவும், பின் நீண்டநாள் நீ வீட்டிற்குவராது போகவும் நேர்ந்தன. எனவே நான் கவல்கின்றேன்" என்று கண்ணீர்உகுத்தவளாய்ச் சொன்னாள். அரங்கன் அவள்கண்ணைத் துடைத்து, தேற்றுமொழிகூறி, "பெண்ணே. கனவினில் உண்டாகும் நிகழ்ச்சிகளுக்கு மாறானபடிதான் எல்லாம் நிகழும். ஆதலால் நமக்கு மிக்க பணம் சேரப்போகின்றது. சந்தைசென்று திரும்புகையில் உனக்கென்று ஒரு பவுன் வாங்கிவருவேன்'" என்று கூறி விடைபெற்று வழிநடந்தான். வரப்போகின்ற பவுனின் நினைவினால் தேறிய பட்டம்மாள் தன் வேலையைப் பார்க்கலானாள்.

பணம்சேமிக்கும் முயற்சியிலே விரைந்து வழிநடந்த அரங்கன் சிறுகளத்தூருக்கு அருகாமையில் உள்ள வோர்சத்திரத்தில் இரவைக்கழிக்க வெண்ணினனாய் அங்கு ஓடுமோ ராறுசேர்ந்து கட்டுச்சோற்றைச் சாப்பிட்டுச் சத்திரம் வந்தான். வந்ததும் மற்றோர் வியாபாரியை அச்சத்திரத்தில் சந்தித்தான்.இருவரு நீண்டநேரம் பேசியிருந்துவிட்டுத் துயின்றனர். [illegible]யற்காலையில் அரங்கன் எழுந்திருந்து சிறுகள[illegible] நோக்கிப் புறப்பட்டான். பொழுது விடிந்ததும் [illegible]வூர் போய்ச்சேர்ந்து அவன் ஒரு சாப்பாட்டுவிடுதியில் காலைஉணவு அருந்தினான். அச்சமயம் ஒரு போலீஸ் அதிகாரியும் இரண்டு சேவகர்களும் அவ்விடம் வந்து அரங்கனைப் பிடித்துக்கொண்டனர். அவன் மூட்டையை அவர்கள் சோதிக்கவும் மூட்டையிலிருந்துகுருதி தோய்ந்த கத்தியொன்று அகப்பட்டது. சத்திரத்தில் படுத்திருந்த வியாபாரியைக் கொன்றவன் இவன்தான் என்று நிச்சயஞ்செய்து அவனை விலங்கிட்டு அழைத்துச் சென்றனர். நியாயாதிபதியும் தீவாந்தரசிட்சை விதித்தான். இக் குற்றவாளி அந்தமான்தீவு செல்லுமுன் அவன்மனைவியும் மக்களும் சிறைவந்தனர். வந்தவர்களைக் கட்டியழுதான் அரங்கன்.அவளும் "நான் அப்பொழுதே சொன்னேனே ! கேளாது ஆசையால் இக்கொடுமையுட்பட்டு உன்வாழ்வும் எம்வாழ்வும்ஒருங்குகொன்றனையே" என்றாள். மனைவியின் மொழியில் தன்மீதுசந்தேகம் தொனிப்பது கண்டு,"ஈசா என் மனைவியும் என்னைக் கொலைகாரன் என்று கொள்ளவேண்டுமா? இனி எனக்கு வாழ்வு வேண்டா' என்று சொல்லிக் கண்ணையும் காதையும் மூடிக்கொண்டான். இவ்வளவில் சிறை அதிகாரி மனைவியையும் புருஷனையும் அகற்றுவித்தனன்.

அரங்கன் சிலதினங்களுக்கெல்லாம் அந்தமான்தீவிற்கு அனுப்பப்பட்டான். பத்து வருடங்கள் சென்றன. அப்பொழுது அரங்கன் மிகவும் மெலிந்துவிட்டான். மயிர் முழுதும் நரைத்துவிட்டது. ஓய்வு நேரமெல்லாம் சிறையில் தேவார நூல்களைப் படித்து வந்தான். அவனது சிறந்த ஒழுக்கம் அவன்பால் எல்லோருக்கும் மதிப்பைத் தந்தது. சிறையதிகாரிகளும் அவனைப் பிரியமாய் நடத்தினார்கள். மற்றக் கைதிகளும் இவனைத் தாதா வென்று அழைத்து அவனிடம் மரியாதையாக நடந்துகொண்டார்கள்.

இது இவ்வாறாக, ஒருநாள் புதுக்குற்றவாளி யொருவன் இத்தீவுக்கு வந்தான். அவன் வந்ததும் வழக்கம்போல் மற்றக்கைதிகள் அவனைச் சூழ்ந்துகொண்டு அவன் யாவன் என்றும், எக்குற்றத்திற்காக அங்கு அனுப்பப்பட்டான் என்றும் கேட்டார்கள். அரங்கன் மாத்திரம் மௌனமாய் ஓரிடம் அமர்ந்திருந்தான்.

வந்தவன், தான் சங்கரபுரப் பெருங் கள்வன் என்றும் இதுவரை எவ்வளவோ தண்டனை அடைந்துள்ளதாகவும், இம்முறை தான்செய்யாத குற்றத்திற்காகப் பிடிக்கப்பட்டதாகவும், போலீஸ்காரர் புத்தி அவ்வளவுதான் என்றும் ஒருசிறிதும் வருத்தம் இல்லாது கூறினான். அதைக்கேட்ட அரங்கன் வந்தவனைப் பார்த்து, 'சங்கரபுரக் கடைக்கார அரங்கனைத் தெரியுமா' என்று கேட்டான்.

'நன்றாகத் தெரியும்'

'அவன் மனைவிமக்கள் சுகமோ?'

'மிகவும் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கின்றனர். அவன் ஒரு வியாபாரியைக் கொலைசெய்துவிட்டுச் சிறையில் இருக்கின்றான்'

'அவன் கொலைசெய்தான் என்பது உனக்கு நிச்சயந்தானா?'

"மூட்டையில் கத்தி இருந்தது. அவனும் கொலையுண்ட வியாபாரியுந்தான் அன்று சத்திரத்தில் தூங்கினர். இரவிலேயே அரங்கன் அவ்விடம்விட் டகன்றுவிட்டான். பின் யார்தான் கொன்றிருப்பார். வந்தவியாபாரியிடம் இரண்டாயிரம் ரூபாய் இருந்தது. பணம் என்றால் யார்தான் சும்மாவிருப்பார்" என்றான். இப்படி யிப்புதியவன் புகன்றமொழி அரங்கனைவாட்டியது. பொள்ளென எழுந்துதன் அறையினுட்சென்று தேவாரத்தைப் படித்தான். 'எல்லாம் கடவுள்செயல். நான் குற்றம் செய்யாதவன் என்பதைக் கடவுள் அறிவார். அது போதும்?' என்று தன்னைத் தேற்றிக்கொண்டான். அன்றுமுதல் அரங்கன் புதியவனோடு பேசுவதில்லை.

இப்படி ஆறுமாதகாலம் சென்றது. ஒருநாள் இரவில் சிறையருகில் ஓர் அரவம் உண்டாயிற்று. அரங்கன் விழித்துக்கொண்டு ஓசைவந்த திசை சென்றதும் அங்குப் புதியவனைக் கண்டான். புதியவன் திடுக்குற்றானாயினும் அரங்கனிடம்வந்து, "தாத்தா என்காரியத்தைக் கெடுத்துவிடாதே. கெடுப்பாயாயின் என் உயிர் போய்விடும். என்னைச் சிறை அதிகாரிகள் வதைத்துக்கொல்லுமுன் உன்னை நான் கொல்லாதிருப்பேன். உயிர்மேல் உனக்கு ஆசையிருந்தால், இதைக் குறிக்கும் சொல்லாதே. நீயும் தப்பிவிடலாம்!" என்று கூறினான்.

அரங்கனுக்கு அடங்காதகோபம் வந்தது. அதிகாரிகளிடம் இதைக் கூறிவிடலாமா என்று நினைத்தான். முதற்கோபம் சிறிது ஆறியதும், 'கடவுளே உன் செயல்போம்நெறி அறியேன்' என்றுகரங்குவித்து வழுத்தினான். புதியவனோ "என்னைக் காட்டிக்கொடாதிருந்தால் நீயும் தப்பிவிடலாம். உன் மனைவிமக்களையும் காணலாம். என்ன சொல்கின்றாய்," என்று மீண்டும் கேட்கவும் சிறிதுநேரம் சிந்தனையில் ஆழ்ந்து இருந்த அரங்கன் :

'துஷ்டா என்கண்முன் நின்று என்னைவருத்தாதே. கடவுள் சித்தம் நடக்கும். நான்தப்பவும் வேண்டா. மனைவிமக்களையும் கடவுள் காப்பான்' என்று சொல்லித் தன்னறை சென்றான்.

பொழுதுவிடிந்தது. சிறையின்ஓரிடத்தில் சுரங்கம் தோண்டப்பட்டிருப்பதைச் சிறைஅதிகாரிகள் கண்டுவிட்டனர். கைதிகளை விசாரித்தனர். இதைச் செய்தவன் யாவன் என்று யாருக்கும் தெரியவில்லை. எல்லாரும் விழித்தனர். உடனே அதிகாரி அரங்கனிடம் வந்து 'இச்செயல் புரிந்தானைத் தெரிந்தால் சொல். இல்லையேல் விசாரித்து அறிந்து சொல்' என்றனர்.

அரங்கன் நாற்புறமும் பார்த்தான். இக் காரியம் செய்தவனையும் கண்டான். சிறிதுநேரம் மௌனமாய் இருந்துவிட்டு 'ஐயா, என்னால் ஒன்றும் அப்படிச் செய்ய இயலாது. கடவுள் சித்தம் நடக்கும். நீங்கள் என்ன வேண்டுமானாலும் என்னைச் செய்து கொள்ளுங்கள்" என்று கூறி அகன்றான். அதிகாரிகளும் அவன் புத்தித்தடுமாற்றத்தால் அப்படிச்சொல்கின்றான் என்றும், பிறகு விசாரித்துக் கொள்ளலாம் என்றும் அகன்றுவிட்டனர்.

இரவுவந் தடைந்தது. அரங்கனுக்குத் தூக்கம்வரவில்லை. மணியும் பன்னிரண்டு அடித்தது. அச்சமயம் தன் அறையினுள் ஒருவன் வந்தான். வந்தவன் புதிய குற்றவாளியாயிருக்க, 'ஏ துஷ்டா! நான் உன்னைக் காட்டியும் விடவில்லை. ஏன் என்னை வருத்துகின்றாய். வேண்டுமெனில் என்னைக் கொன்றுவிடு" என்று அரங்கன் சொல்ல, புதியவன் 'பெரியோய் என் பிழை பொறுப்பாய்' என்று கூறி அரங்கனது பாதத்தில் விழுந்தழுதான்.

அரங்கன் அவ்வண்ணம் அழுவானை வாரியெடுத்து 'ஏன் அழுகின்றாய்' என்றான்.

"உன்மனப்பெருமை என்னைத் தெளியவைத்தது. ஐய, நான் சாகவேண்டியவன், என் சிறுமையால் உன் வாழ்வின் நலங்கொன்றேன்; உன் மனைவிமக்களையும் வாடச்செய்தேன்; என்னைப் பொறுப்பாய்.''

"அன்று சத்திரத்தில் படுத்திருந்த வியாபாரியைக் கொன்றவன் நான்தான். என்னைக் காப்பாற்றிக் கொள்ள உன் மூட்டையில் கத்தியை வைத்தேன். ஐய, உன்னை வாடக்கண்ட நான் உய்வேனோ? பொறுத்தேன் என்று சொல்வாய். உன் மனைவிமக்களுக்கு உதவும்பொருட்டு ஆயிரம் ரூபாய் கொடுக்கும்படி எனது நண்பனுக்கு எழுதிவிட்டேன். ஒருகாரியம் ஆயிற்று. நீ மன்னிப்பாயேல் சிறிது ஆறுதல் அடைவேன். பெரியோய் அருள்வாய்."

என்றுஇவ்வண்ணம் கதறுகின்ற புதியவனைநோக்கி, "மன்னித்தேன். வினையின் கருவியாக அமைந்தஉன்னை நோவதால் என்னபயன். என் 'வேண்டல் வளர்த்த மரம் இது; உன் பிழையன்று, மன்னித்தேன்;" என்று சொல்லி மூர்ச்சையுற்றுக் கீழே சாய்ந்தான்.

இம்மொழிகேட்ட புதியவன், "இரண்டாவது காரியமும் ஆயிற்று. இதோ சென்று உன்னையும் விடுவிக்கின்றேன்" என்று ஓடி அதிகாரிகளிடம் உண்மையைக் கூறினான். அதிகாரிகளும் அரங்கனை விடுதலைசெய்ய வந்தனர்.

வந்தவர் சுவரிலே சாய்ந்த அரங்கனை அழைத்தனர், பேச்சுமூச்சில்லை. தட்டியெழுப்பினர், எழுந்திருக்க வில்லை. கலையாத துயிலதனில் பேரமைதி உற்றவனாய் அமர்ந்துவிட்டான்.



# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[973-வது பக்கத் தொடர்ச்சி]

நிமிர்வதே கரும மல்லால் குறைவுற நிகழ்த்த நேரார்.

ஆதலால் யாதினிப் புகல வேண்டும். மனுகுலத் தொரு தனிவேந்தன் தயரதன் தாழலாமோ! வரசரோருகன் மகன் வசிட டமாமுனி மூவரின் நால்வராம் தேவர்போல் நின்று அக்குற்றமில் குலத்தரசர் காவலின் ஆணையின் கடவுளாயமைந்தும் அலாநெறி அரையன் சென்றால் அதனைக்கண் டாற்றுவானோ? சுமந்திரனே சோர்ந்தானென்றால் மந்திரத்தில் தீர்ந்தார் யாரேயுளர். வள்ளல் இராமனைப் பயந்த தந்தை வாய்மையில் குன்றக்கண்டும் சீதையைத் தந்த ஜனகப் பெருந்தகை அதனைப்பாராட்டி மகிழ்ச்சியால் மயங்குவானோ. கோசலையோ தன்மகற் குரியதாகா அரசினை எய்தகொய்யக் குறிவைத்துக்கொண்டிருப்பாள். எவ்வாற்றாலும் ஒவ்வாத ஒரு படுகுழியில் யாவரையும் பாய்ச்சுகின்ற ஒருசுல்கச்சூளால் கைகேயி பறித்துவைத்த பேரரசினைப் பரதன் அடையாதது போன்றே ஸ்ரீமான் சோமசுந்திரபாரதியார் அளிக்கின்ற புகழையும் அவள் தாங்குதற்குரியவளாய் நிற்கவோ காண்பதற்கில்லை. அமரர் புரிந்த மாயத்தால் அவள் மனந்திரிந்து இராமன்பால் இரக்கந் துறந்தவளாயினாள் எனக் கம்பர் காட்டுங் காரணமே அவள் நிலைகண் டிரங்கும்படி செய்கின்றது. அதனால், அவளொடு மற்றவர்க்கும் யாதும் வசையிலாவகையிற் கதையிது அமையுஞ் செவ்விபைக் கற்பித்தவராகின்றார் கம்பர்.

இதுவே புலமை. முதனூற் கதையொன்று, மாபெரும் புலவர்தம் மனத்தூடு பாய்ந்து வெளிவருங்காலத்து முன்னினும் பன்மடங்கு தூய்மையாய்த் தோன்றலாகும். எத்துணை இழிந்தோரையும் அவ்வவர் நிலைமைக்கேற்க ஒவ்வோரளவு உயர்த்திவைப்பதே உத்தமக்கவிகளின் இயற்கை. இந்தவாய்மையை ஆங்கிலமகாகவி ஷேக்ஸ்பியர்வயின் நன்கு காணலாம். ஈந்த கடனிற்கு மாறாகக் கொண்டோனுடலினொரு கூறிறுத்த கொடியோன் ஷைலாக் என்னும் யூதனைத் தங்கள் நாடகங்களில் முன்னர் இயக்கி வைத்த கவிஞர் பற்பலர். அன்னார் கற்பனைகளை அகத்துட்கொண்டு ஷேக்ஸ்பியர் தன் "வெனிஸ் வர்த்தகன்" என்னும் நாடகத்தை வரைந்தார். எனினும், அவன்தன்மை இவ்வாங்கிலக் கவிவரரால் சிறிது மாற்றப்பெற்றிருக்கின்றது. மாற்றிய பாகம் சிறிதேனும் அதனால் எய்திய நாடகப்பயன் சாலப் பெரியது. இந்நாடகத்தின் ஒரு பகுதியை வேறோரிடத்தில் (754-வது பக்கம்) மற்றோர் நயங்கருதி மொழிபெயர்த்து வரைந்திருக்கலாகின்றது. அதனையே கொண்டு மீண்டுமிச் செவ்விக்கிணங்கிய கருத்தை விளக்குதல் கூடும்.

ஷேக்ஸ்பியருக்கு முன்னிருந்த நூல்களில் ஈரமில்லா நெஞ்சத்துக் கயவரிற் கடையாய குணத்தொடு நடித்தான் ஷைலக் என்னும் யூதன். அண்டோனியோவின்பால் அவன் ஆறாப்பகை பாராட்டியதற்குக் காரணம் அவன் இவனது வர்த்தகத்திற் கிடையூறாய் நின்றான் என்பதுமட்டுமே அந்நாடகங்களால் தெரிகின்றது. அவ்வண்டோனியோவை வ[illegible] விட்டால் பின் தனது வர்த்தகலாபம் பெருகுமென அற்றம்பார்த்திருந்த ஷைலாக், வணிகத்தில் இகலி நின்ற அவனைக் கொடியதோர் வகையில் கொன்று தீர்க்க முயன்றனன் என்பது முன்கதை. பரதனே யரசனானால் கொற்றவன் அன்னையாம் கைகேயியின் சார்பினால் தன்னுடைய செல்வாக்கும் பெருகும் என்ற இலாபத்தை நினைத்து இராமனை அகற்றுதற்கு முற்பட்டாளோ என்றயிர்ப்பதல்லால் கூனியின் கொடுமைக்கு வேறோர் காரணம் காட்டியிராத வான்மீகரது கற்பனையை யொக்கும் இது. பிறர் துன்புறத் தான் செல்வம்பெற்று இன்புற வேண்டுமென்னும் கொள்கையால் நிகழ்த்துஞ் செய்கைகள் மிகக் கொடியன. ஒருவிதத்திலும் நம்முடைய பரிவிற்குப் பாத்திரமாகாவகை ஷேக்ஸ்பியருக்கு முன் ஷைலாக் அமைக்கப்பெற்றிருந்தான். கண்டாரிதனை ஆங்கிலக் கவியரசு. அவருடைய நாடக [illegible] இது உகந்ததாயிருக்கவில்லை. கொடியன செய்யப் புகுந்த[illegible]யினும் அதனிற்கும் ஓரளவு காரணமுளதாதலின் [illegible]வன் அறக்கொடியோனல்லன் என்னு மெண்ணத்தை மனத்தில் எழுப்பிவைக்குஞ் சூழ்ச்சியராகின்[illegible] தன் செல்வப்பெருக்கைச் சிந்தித்தே அண்டோனியோவைக் கொல்லப்புகுந்தான் என்று இயங்கியிருந்த ஷைலாக்கின் பண்டைச் சித்திரத்தை மாற்றியமைக்கவந்த ஷேக்ஸ்பியர் கடன்கொள்ளும் அமையத்தில் அண்டோனியோவிற்கும் ஷைலாக்கிற்கும் இடையே பின்வரும் உரைகளை நிகழ்த்திவைக்கின்றார்:—

ஷைலாக்:—மூவாயிரம் பொன்; மும்மதி; பெருந்தொகையாதலின் பெறலாம் வட்டியை எண்ணிப் பார்ப்பல்.

அண்டோனியோ:— சரி, ஷைலாக்கே பணமீந் தெமைக் கடன் பட்டிடச் செய்வையோ?

ஷைலாக்—அந்தோனியோவே, யடிக்கடி பன்முறை

எனது பணமும் வட்டியுஞ் சுட்டி
நாணயச் சாலையி னனியிகழ்ந் துளீர்நீர்
எங்குல விருது பொறையே யாதலின்
எக்கா லமுமதை யென்றோள் விதிர்ப்புடன்
பொறுத்துளேன். என்னைநீர் பொய்மதக்கோள்
உடையா யென்று முயிருண் சுணங்கன்
என்றும் விளித்தே யென்னுடை யூத
மேலா டையின்மேல் மிச்சி லுமிழ்திரால்.
இத்தகைச் செயலெலா மெனதே யான
பணம்யான் வழங்கும் பான்மையி னாயின.
உமக்கிப் போதென் னுதவிவேண்டும் போலும்.
ஆதலி னெவ்வயி னடைந்தனிர்' அடைந்து
ஷைலாக் கே நீ தருதி பணம்" என
உரையா நின்றனிர், உம்வாய்ப் புனலை
என்றன் முகத்தி லுமிழ்ந்தே யென்னையும்
உந்தம் வாயலி லுற்றவே திலன்றன்

'மிகவும் கஷ்டப்பட் னின் றகற்றி
அவன் ஒரு வியாட ஊ உதைத்துளிர் நீரே.
சிறையில் இருக்கின் னீர் உமக்கு நானும்
'அவன் கொ வ தெவன்? ஞமலிக்கும்
யந்தாறு?' தா? பண மூவாயிரம். பொன்
"மூட் கள்ளநாய் கடன்றரல் கூடுமோ?
ஏட னியம்பிடி னேற்கா தாகுமோ?
பா, அடியேன் மீது நீரும்
உமிழ்ந்தீர் புதவா ரந்தனி லுமிழ்நீர்,
இன்ன நாளிலே யெனைநீர் உதைத்தீர்,
இன்னு மோர்முறை யெனைநீர் நாயென்
றிகழ்ந்தீ ரித்தகை மரியா தைக்கா
உமக்கித் துணைப்பண முதவு வல்யான் என்"
றடிபணி வுற்றியா னடிமையிற் றிறனுடன்
அதிவணக் கத்தோ டயலார் கேட்கொண
வாய்ப்பேச் சுடனே வழங்கிட வேண்டுமோ?
அண்டோனியோ:—நானுனை யின்னு
நாயென விளிப்பேன்,

உமிழ்வே னுமிழ்நீ ருதைப்பேன் முன்போல்,
அளித்தற் கியையுறிற் கடன்நின் அன்பர்க்
கீயுமா றென்றனக் கீவதை யொழிதி நீ.
ஈனுந் தகைமை யில்லா வியல்புடை
உலோகந் தனக்கு வட்டியென் குட்டி
தன திரன்றன் பாலெக் காலெந்
நேயர் பெற்றுளான்? நீ யெனக்குப் பணம்
தருவையேல் சத்துரு தான்படுங் கடனைக்
குறித்த நாளில் கொடாஅ தொழியிற்
றண்ணளி யின்றித் தண்டனை புரியூத
வாங்கு மாபோல் வாங்குதி. இவ்வா
றன்றியீ யற்க.

எனின், ஷைலாக் அண்டோனியோவின் உயிரை வாங்கக்கருதியது தன்னுடைய இலாபத்தின் பெருக்கத்திற்காக அன்று. அண்டோனியோவால் ஷைலாக்கின் குலமும் மதமும் தொழிலும் இழிவுறப் பன்முறை நிந்திக்கப்பட்டிருக்கின்றன. வேறோர் மதத்தைச் சேர்ந்தவனுல் ஷைலாக் நாயென்று வையப் பெற்றான், உமிழ்நீர் துப்பப்பெற்றான், பல்லோர் முன்னர் உதைக்கப்பெற்றான். மற்று அவன்முன் இரவலனாய் வந்துநிற்கும் அந்த நாளிலும், அண்டோனியோ அவைகளையே இன்னமும் செய்வானென அறைகின்றான். அத்தகைய நிந்தனைகளைப் பொறுப்பது திப்பியப் பெருந்தகைமையாயினும் அப்பழி தீர்க்க வேண்டுமென்று அவாவுகின்ற மாநுடனை ஒருவரும் மிகமிக வெறுக்கமாட்டார். அந்நிந்தனைக் கீடாக வாங்கநினைத்த பழியின் கொடுமை இத்துணை அதிகமோ ஆதல் வேண்டும் என்பதே ஷைலாக்கின்பால் காணக்கூடிய குறையாய் ஷேக்ஸ்பியரின் முறைப்படி முடிகின்றது.

இவ்வண்ணம் கொடுமை மிகுந்த ஷைலாக்கின் தன்மையையும் ஓரளவு உயர்த்திய ஷேக்ஸ்பியர் போன்றே கம்பரும் முதனூலிலிருந்து தான் பெற்ற பாத்திரங்களில் தாரையே முதல் யாவரையும் உயரவே மாற்றிக் கற்பித்தாரென்பது அறியாத தொன்றன்று. அவ்வாறிருக்கக் கோசலையையும் தயரதனையும் மற்றுளபெரியோரையும் குறைக்கத்தான் மனங்கொள்வாரோ. இத்தனை விபரிதங்கள் நேர்வதால், முதனூல் முனிவரர் நோக்கம் எதுவாயினும், கலைக்கரசு கம்பர் தன் பாத்திரங்களை அவரவர்க் குரிய உயரிய நிலையிலேயே தளராமல் வைத்துக் காத்தளிக்க வல்லவரா கின்றார் என்னுமுண்மை இதுகாறும் உரைத்தவைகளால் உணரநிற்கின்றது.

வி. பி. வரவேண்டுமென்று காக்காமல், வருகின்ற ஆண்டின் சந்தாவை இன்றைக்கே அனுப்பிவைப்பார் உதவியை யாம் மிகப் பாராட்டுவோம்.

மானேஜர்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜன்ஸ்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்


டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்ளுக்கு ரூ. (1-8-0)
பிரான்சு:
டிப்போ, பம்பாய்
கல்கத்தா


மதுரை.
காஞ்சீபுரம்.



# தமிழ்ப் பாடம்

## இலக்கணம்

[ 975-வது பக்கத் தொடர்ச்சி ]

ளகர மெய்யீறு.

லகர மெய்யீற்றுப் புணர்ச்சிக்கும் ளகர மெய்யீற்றுப் புணர்ச்சிக்கும் பேதம் அதிகமில்லை. அவை பெரும்பாலும் ஒத்தே நடக்கும். லகரமெய் னகர மெய்யாகத்திரிகின்ற இடங்களில் ளகரமெய் ணகர மெய்யாகத்திரியுமென்றும், லகரமெய் றகர மெய்யாகத்திரிகின்ற இடங்களில் ளகரமெய் டகர மெய்யாகத் திரியுமென்றும் பொதுவாகக் கொள்ளலாம். ஆதலால் இதற்குரிய விதிகளைத் தனித்தனி யெடுத்தெழுதி விளக்குவது மிகை. வாசகர்கள் தாங்களே முயன்று விதிகளும் உதாரணங்களும் அமைத்து நோக்கி இவ்விறுதிப் பாடத்தைப்பயில்வது நலம். எனினும் சிற்சில உதாரணங்களை மாத்திரம் இங்குக் காட்டுவோம்.

1. கல் + யானை = கல்யானை, கல்லியானை
புள் + யாது = புள்யாது, புள்ளியாது
வருமொழி முதலில் யகரம் வர, இயல்பாகவேனும், இகரம் தோன்றியேனும் புணரலாம்.

2. வில் + வளைத்தான் = வில்வளைத்தான்.
கள் + விற்றான் = கள்விற்றான்.
வருமொழி முதலில் வகரம்வர இயல்பாய்ப் புணர்ந்தன.

3. தோல் + முரசு = தோன்முரசு.
முள் + முகை = முண்முகை.
வருமொழி முதலில் மெல்லினம் வர, ணகரமாகத்திரிந்தது.

4. கல் + நாய் = கன்னாய்.
புள் + நகம் = புண்ணகம்.
நிலை மொழியீற்று ளகர மெய் வருமொழிமுதல் நகர மெய் வர ணகர மெய்யாகத் திரிந்து புணர்ந்தன.

5. கால் + நாழி = கானாழி.
வாள் + நுனி = வாணுனி.
வருமொழிமுதல் நகரம் ணகரமாகத்திரிவதுடன் நிலைமொழி யீற்றுளகர மெய் கெட்டது.

6. தோல் + செருப்பு = தோற்செருப்பு.
வாள் + கை = வாட்கை.
உருபும் பயனும் உடன் தொக்க வேற்றுமைத் தொகையில், வருமொழி முத
லில் வல்லி
ளகரமெய் ட

7. வீட்டில் + கண்டேன்
வீட்டினுள் + க
கண்டேன்.
உருபின் ஈற்றிலுள்
மெய் யாகத்திரிந்தது

8. முகில் + படர்ந்தது = முகில் பட
தேள் + புகுந்தது = தேள்புகுந்தது
கால் + பிடித்தான் = கால் பிடித்தா
தோள் + பற்றினன் தோள்பற்றினன்
கொல் + களிறு = கொல் களிறு
கொள் + கலம் = கொள் கலம்
பேசேல் + பாவாய் = பேசேல் பாவாய்
கண்டாள் + காரிகை = கண்டாள் காரிகை
நிலைமொழி யீற்று ளகரமெய்கள், வருமொழி முதலில் வல்லின மெய்வர, இயல்பாய்ப் புணர்ந்தன.

9. கொடியாள் + தடமார்பு = கொடியாட்டடமார்பு
இருள் + தனை = இருடனை.
இவள் + தன்மை = இவளன்மை.
வாள் + தானை = வாட்டானை.
புள் + தோகை = புட்டோகை.

நிலைமொழி யீற்றில் ளகரமெய் நிற்க வருமொழி முதலில் வரும் தகரமெய் டகரமெய்யாகத் திரிந்து, நிலைமொழியீற்று ளகரமெய் கெட்டும், டகரமெய் யாகத் திரிந்தும் புணர்ந்தன.

உயிரீறு மெய்யீறு ஆகிய ஈறுகளுக்கு யாம் இதுகாறும் உரைத்துள்ள விதிகளை மனதிற் கொண்டு, நமது வாசகர்கள் இலக்கிய நூல்களைப் படித்துக் கொள்ளும்போது ஆங்காங்குச் சொற்கள் புணர்ந்திருக்கும் விதங்களை இவ்விதிகளுக்கு இணங்கி நோக்கிப் பயிலல் வேண்டும். அவைகளில் ஏவையேனும் இவ்விதிகளுக்குள் அடங்காதனபோல் தோன்றினல், நன்கு ஆராய்ந்து அவ்வாறு வருகின்ற பிறஉதாரணங்களையும் ஒன்று சேர்த்து எவ்விதியில் சேர்க்கலாம் என்று சிந்திக்க முயல்வது பயன் தரும்.

இதனுடன் நம்தமிழ்ப்பாடம் முடிகின்றது. அடுத்த வாண்டிலிருந்து இங்கு உரையுடன் வரும் 'சூளாமணியை' இலக்கியப் பாடமாகப் படித்துக்கொள்ள விரும்புவோர் அவ்வாறு செய்யலாம். இலக்கணப் பகுதிக்கு இனி யாப்பிலக்கணம் ஆரம்பமாகும்.

# [வ]ர்த்தமானம்

...ம என்னும் தலைப் ...பகாரி கார்யாலயத்தி ...லாயிற்று. அப்புத்தகத் ...ண்டுவோர் லோகோபகாரி ...ணைத் தபால்தலையனுப்பிப் ...த்துவ உணர்வினுல் உயர்ந்த ...பெற்ற கடிதத்தின் சிறப்பை ... தம்மீது பழிசுமத்திக் கொண் ...மை மனைவிக்கு அரவிந்தர் எழு ...தது. நிலைதடுமாறும் இக்காலத்தில் ...ம் இதைப்படித்தல் நலமுடையதே.

***

இரங்கோன் நவீனகதா புத்தக சாலையி ...ட அண்டிமென் என்னும் வெளியீடொ ...திப்புரைக்கு வரலாயிற்று. இதை எழுதிய ...மீனில் வக்கீல்தொழில்புரியும் ஸ்ரீமான் V. ...மி பிள்ளை. இரங்கூனில் பிரபலபாரிஸ்டராக ...ம் ஸ்ரீமான் C.K. தம்பி யவர்கள் இப்புத்தகத் ...த முகவுரை கூறியுளார் ஆதலால், இது பயனு ...ய வெளியீடென்பதற்கு ஐயமிராது. ஆண்டி ...மன் (on Demand) என்று சொல்லப்படும் பிரா மிஸரிநோட்டுகள் எழுதும்முறை மாதிரிகளுடன்வரை யப்பட்டிருக்கின்றது. இது வியாபாரிகளுக்கு மிகவும் உபயோகமுடையது. இதன் விலை 8 அணு. வேண்டு வோர் நவீனகதா புத்தகசாலை இரங்கோன், என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

***

சம்பர் சங்க விழா:— சென்றவாரம் திருச்சிக்கு அருகாமையிலுள்ள குழித்தலையில் ஸ்ரீமான் கா. சுப்பிரமணியபிள்ளை எம் ஏ. எம். எல். அவர்களின் தலைமையின்கீழ் கம்பர் செந்தமிழ்ச்சங்க ஆண்டு விழா நடைபெற்றது. விழா முடிவில் தமிழ் வளர்ச் சிக்குரிய பின்வரும் தீர்மானங்கள் செய்யப்பட்டன:-

சென்னைப் பல்கலைக் கழகத்தார் தமிழில் பி.ஏ. ஆன ர்ஸ் ஏற்படுத்தவும், பி. எஸ். ஸி. வகுப்புக்குக் கட் டாயப் பாடமாகத் தமிழை ஏற்படுத்தவும் வேண்டு மென இக்கூட்டத்தினர் அக்கழகத்தாரைக் கேட்டுக் கொள்கின்றூர்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தாரைச் சென்னைப் பல்கலைக் கழகத்திலிருப்பதுபோல பி. ஏ. வகுப்பிற் குத் தமிழைக் கட்டாயப் பாடமாக்கவும், பி. ஏ. ஆனர்ஸ் பி.எஸ்.சி. வகுப்புக்களிலும் தமிழைப்படிக்க வேண்டிய வசதிகள் செய்துதரவும் இக்கூட்டத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

திருப்பனந்தாள் உயர்திரு ஸ்ரீலஸ்ரீ மடாதிபதி அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்வித் வான் வகுப்பில் முதலில்தேர்வார்க்குப் பரிசு ஏற்படுத் தியருளியதுபோலவே அண்ணுமலைப் பல்கலைக்கழகத் திற்கும் ஓர் பரிசு ஏற்படுத்த வேண்டுமென இக்கூட் டத்தினர் மிக வணக்கத்துடன் வேண்டிக்கொள்கின் றூர்.

தமிழில் தனிச் சிறப்புப் புலமை இருந்தாலன்றி, ஆங்கிலப்பட்டதாரிகளைக்கல்லூரிகளில் தமிழ்போதிப் பவராக அமர்த்தலாகாதெனப் பல்கலைக் கழகத்தார் களையும், அரசியலாரையும், கல்லூரித் தலைவர்களையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கின்றது.

ஆசிரியப் பழக்கக் கல்லூரி வகுப்புக்களிலும் உயர்தரப் பள்ளிக்கூடங்களைச் சார்ந்தோ தனித்தோ விருக்கும் நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் முதற் பாரம் அல்லது ஆறும்வகுப்பு முதலாகவுள்ள வகுப் புக்களிலும் தமிழைத் தமிழ்ப் பண்டிதர்கள் வாயி லாகவே கற்பிக்கவேண்டுமென இக்கூட்டம் பள்ளிக் கூடங்களின் தலைவர்களையும் அரசியலார் கல்விநெறி யாராய்ச்சியாளர்களையும் கேட்டுக்கொள்கின்றது.

தமிழில் வித்துவான்வகுப்புப் பாடங்களில் வேண் டியக் அளவு ஆங்கிலத்தையும் (தாமே விரும்புவார் குச்) சேர்த்துப் படிப்பித்து அன்னூர்க்கு உயர்தர நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் தமிழேயன்றித் தாம் போதிக்க இயலும் எல்லாப் பாடங்களையும் போதிக் கும் உரிமையும், ஆங்கிலப்பட்டதாரிகளை யொக்கும் எல்லா உரிமைகளையும் அளித்துவர இக்கூட்டம் அர சியலாரையும், பலகலைக் கழகத்தாரையும் கேட்டுக் கொள்கின்றது.

கல்லூரிகளில் உள்ள தமிழ்ப் பண்டிதர்கட்கு அக் கல்லூரிகளில் ஏனைப் பாடங்களைக் கற்பிக்கும் பேரா சிரியர் உதவிப் பேராசிரியர் என்னும் பெயர்தந்து அப்பேராசிரியர்கட்குரிய எல்லா உரிமைகளையும் அளித்துவருமாறு பலகலைக் கழகங்களையும் அரசிய லாரையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கின்றது.

தமிழ்ச் சிலாசாசனங்களை ஆராய்ச்சிசெய்வதற்குத் தமிழ்ப்புலவர்களை நியமிக்கும்படியும் அவற்றைத் தனியாக ஆராய்தவற்கு உதவிசெய்யும்படியும் இது வரையில் ஆராய்ந்துள்ள தமிழ்ச் சாசனங்களை கூடிய விரைவில் அச்சேற்றும்படியும் அரசாங்கத்தாரை இச் சங்கம் வேண்டிக்கொள்கிறது.

தமிழ் வளர்ச்சியின் பொருட்டு நிறுவப்பெறும் தமிழ்ச்சங்கங்களுக்கு உதவிசெய்யும்படி இக்கூட்டத் தார் அரசாங்கத்தாரை வேண்டிக் கொள்கின்றனர்.



# 1930-ம் வருஷத்திய வால்யூம் —

(ஜூலை முதல்—டிசம்பர் வரை.)

## தலையங்கம்.


| இதழ். | | | பக்கம் |
|---|---|---|---|
| 26 | வண்டி. மாடும் மாட்டுவண்டியும் | 1 | ... 501 |
| 27 | ” ” | 2 | ... 521 |
| 28 | ” ” | 3 | ... 541 |
| 29 | சகுனியின் மரபுதான் சாய்வதில்லையோ | | ... 561 |
| 30 | உரிமையாற் பெரியராகார் | | ... 581 |
| 31 | நாணத்தால் நைவார் திறம் | | ... 601 |
| 32 | மால்வோலியோவின் மரபும் மாய்ந்ததில்லை | | 621 |
| 33 | மான மழிந்தபின் | | ... 641 |
| 34 | கலைகளே மானங் காக்கும் | | ... 661 |
| 35 | மண் காற்று | | ... 681 |
| 36 | இதுவே இயற்கை | | ... 701 |
| 37 | பெரும்பாலோர் பிழை | | ... 721 |
| 38 | பேயச்சில் பிள்ளையாரோ | | ... 741 |
| 39 | பொழுதில்லாப் பொய் | | ... 761 |
| 40 | தலைகீழ்க் கணக்கு | | ... 781 |
| 41 | சீனப் பழமொழி | | ... 801 |
| 42 | பள்ளியிற் பழுத்த பழம் | | ... 821 |
| 43 | கள்வரும் காவலும் | | ... 841 |
| 44 | பொன்னெழுத்தாற் பொறிக்கலாமோ | | ... 861 |
| 45 | அரக்கராற்றல் | | ... 881 |
| 46 | சுண்டெலியின் ஆற்றல் | | ... 901 |
| 47 | வாலின் நீளம் | | ... 921 |
| 48 | பெருமையின் பெருமை | 1 | ... 941 |
| 49 | ” ” | 2 | ... 961 |
| 50 | கலாநிலயம் | | ... 981 |


## கம்ப ராமாயணம்—அயோத்தியா காண்டம்

மந்தரை சூழ்ச்சிப் படலம்


| | | |
|---|---|---|
| 26 | உள்ளமோ வொருகால் சாயு மறிவுதா னற்ற லாமே | ... 513 |
| 27 | வகையினை யறிந்தபின் மொழிகளும் தெளியும் | ... 534 |
| 28 | உள்ளமு மறிவும் மீண்டு மொத்தன | ... 555 |
| 29 | இயல்பிற் கிரங்க வியம்பின ரிருவரும் | ... 576 |
| 30 | முனிவரர் படைத்த கூனி மூர்க்கமே நினைத்துச் சொன்னள் | ... 592 |
| 31 | அறமே நினைத்தும் ஆற்றுவார் இன்னல் | 615 |
| 32 | கவியைக் கடந்த கருத்து முளதோ | ... 635 |
| 33 | அமரர்க்கோர் கருவியே கேகயி யாயினள் | 655 |
| 34 | உவகையும் வெகுளியு மூறுதற் கொண்ணுமோ | ... 672 |
| 35 | அறத்தினைக் காக்கவோ வரத்தினை வேண்டினள் | ... 695 |
| 36 | சூழ்வினை யாழ்பொருள் சொல்லி னரரோ | 709 |
| 37 | கூனியை யேற்றிய கோபுர மிதுவோ | ... 734 |
| 38 | முதனூற் கதையை யியற்கையி னியக்கினர் | .752 |
| 39 | புன்பொரு ளதுவெனப் போக்கக் கூறுவார் | .775 |
| 40 | ஒருமகன் பரதனே யாதல் வேண்டுமோ | 797 |
| 41 | சட்டத்தால் சாதிப்பரோ வொன்று. | ... 815 |
| 42 | உரிமையா லிரக்கந் தீர்ந்த உத்தமி யிவளே யென்கோ. | ... 835 |
| 43 | தன்ன தாயினற் றந்திடத் தாழ்வனே | ... 852 |
| 44 | மன்னவன் புகழைக் கொன்றே மாதராள் பழியைப் போக்கல். | ... 875 |
| 45 | இதுவோ அன்னய் நின்ற னியற்கை. | ... 895 |
| 48 | வான்மீகர் வாய்மைசில வேண்டியவா ருமோதான் | ... 953 |
| 49 | யாவரும் செல்நெறி இராமனும் சென்ற னன்றே | ... 973 |
| 50 | நிமிர்வதே கருமமல்லால் குறைவுற நிகழ்த்த நேரார் | ... 993 |


...ர.

இதழ்.

26 ஔவையார், த... நன் முல்லையார், க...

30 அள்ளூர் நன்முல்லைய... கோக்குளமுற்றத்தார்,... பரூஉமோவாய்ப் பதும... வாயிலார்தேவனூர், காவ... ணர், நக்கீரர்.

31 கபிலர், மதுரைக்கண்ணனு... தேவனூர், நம்பி குட்டுவனூர், ... கிழார், தீன்மதி நாகனூர், ஆலத்... மாதீரத்தார், பொன்னுகனூர், கபி... கீரனூர். (1...

32 குன்றியனூர், நன்னுகையார், சத்தி... பரணர், கபிலர், ஓரம்போகியார், ... முடவனூர். (117-...

33 பாலைபாடிய பெருங்கடுங்கோ, அம்மூவ... ஒக்கூர் மாசாத்தியார், ஓரம்போகியார், ...னர், கோப்பெருஞ் சோழனூர், வெள் ...வீதியார். (124-130)-...

34 நக்கீரர், சிறைக்குடி ஆந்தையார், உ...யூர் முதுக்கண்ணன் சாத்தனூர், கோவேங்கைப் பெருங்கதவனூர், பாலைபாடிய பெருங் கடுங்கோ, மீளைப்பெருங் கந்தனூர், பாலை பாடிய பெருங்கடுங்கோ, ஒக்கூர் மாசாத்தி யார், கொல்லன் அழிசியார், அள்ளூர் நன் முல்லையார், மதுரைப் பெருங் கொல்லனூர், கபிலர், மதுரைக் கணக்காயனூர் மகனூர் நக்கீரனூர். (131-143)—666

35 மதுரை யாசிரியர் கோடங் கொற்றனூர், கொல்லன் அழிசியார், வெள்ளிவீதியார், கோப்பெருஞ் சோழனூர், இளங் கீரந்தை யார், வெள்ளி வீதியார், மாடலூர் கிழார் தூங்கல் ஓரியார், கிளிமங்கலம் கிழார், கபிலர், மதுரைச் சீத்தலைச் சாத்தனூர், ஒரோ டகத்துக் கந்தரத்தனூர். (144-155)—690

36 பாண்டிய னேனுதி நெடுங்கண்ணனூர், அள் ளூர் நன் மூலனூர், ஔவையார், வடம் வண்ணக்கன் பேரிசாத்தனூர், மதுரை மரு தன் இளநாகனூர், நக்கீரர், கருவூர்ப் பவுத் திரனூர், அம்மூவனூர், மாங்குடி மருதனூர், பரணர், கூடலூர் கிழார், கூடலூர் கிழார். (156-167)—712

37 சிறைக்குடி ஆந்தையார், வெள்ளி வீதி யார், கருவூர்க் கிழார், பூங்கண்ணுத்திரை யார், கச்சிப்பேட்டு நன்னுகையார், மது ரைக் காஞ்சிப் புலவனூர், வெண்பூதியார், உலோச்சனூர், வருமுலையார் இத்தி, உலோச்சனூர், நெடும் பல்லியத்தையார், குட்டுவன் கண்ணன், கச்சிப் பேட்டு நன் னுகையார், கிள்ளிமங்கலம் கிழார், மடல் பாடிய மாதங் கீரனூர். (168-182)—730

38 ஔவையார், ஆரியவரசன் யாழ்ப் பிரமதத் தனூர், மதுரை அறுவை வாணிகன் இள வேட்டனூர், ஒக்கூர் மாசாத்தியார், கபிலர், மதுரை அளக்கர் ஞாழார் மகனூர் மன்ன னூர், மதுரை ஈழத்துப் பூதன் தேவனூர், பூதன் புல்லனூர், (பேர்தெரியாத புலவர்),

பக்கம். இதழ். பக்கம்

...சில
...ளைக்
...96)—743

...பகது ...லர், பர
...தரியாத புலவர்)
...நெடும்பல்லியத்த
...தனர், உலோச்ச
...உறையனர், கபிலர்,
...த் கடுங்கோ, காக்கை
...ள்ளையார், காவன்முல்
...தற் கார்க்கியனர், கச்சிப்
...க்கொற்றனர், கூடலூர்
... அளக்கர் ஞாழார் மகனர்
(197-215)—763

...க் காஞ்சிக் கொற்றனர், தங்
...கோவலனர், கொற்றனர், வெள்
...ர் மகனர் வெண்பூதியார், ஒக்
...த்தியார், உறையூர் முதுகொற்ற
...றைக்குடி ஆந்தையார், மதுரைக்
...த்தார், மகனர் வெண்ணகனர்.
...மைந்தனர், கபிலர், மதுரை எழுத்
...ன் சேந்தன் பூதனர், ஒதிஞானியார்,
...தி வள்ளுவன் பெருஞ் சாத்தனர்,
...தாசனர், அறிவுடை நம்பியார், பாலை
...டிய பெருங்கடுங்கோ, ஊன் பித்தை
...ர், பேயனர், ...மிளைப்பெருங் கந்தனர்,
...மாயேண்...ன். (216-235)—783

...வருஉத் தலையார், அள்ளூர் நன்முல்லை
யார், குன்றியனர், ஆசிரியர் பெருங்
கண்ணனர், கொல்லன் அழிசியார், கபி
லர், குழற்றத்தனர், நம்பி குட்டுவனர்,
கண்ணனர், மாலை மாறனர், கபிலர், சேந்
தன் பூதனர், உலோச்சனர், கபிலர், நாம
லார் மகனர் இளங்கண்ணனர், இடைக்
காடர், கிடங்கிற் குலபதினக் கண்ணனர்,
பூங்கண்ணனர், பாரகாபனர், கடுகுபெருந்
தேவனர். (236-255)—803

42 (பேர்தெரியாதபுலவர்)உறையூர்ச் சிறு கந்த
னர்,பரணர், கபிலர், கல்லாடனர், கழார்க்
கீரன்எயிற்றியார்,பாலை பாடியபெருங்கடுங்
கோ,பெருஞ்சாத்தனர்,கபிலர்,கருவூர்க் கந்
தப்பிள்ளையார்,நக்கீரர், காலறி கடிகையார்,
கருவூர்ச் சேரமான் சாத்தனர், கல்லாட
னர், பாண்டியன் பன்னடுதந்தான், அழிசி
நச்சாத்தனர், ஒருசிறைப் பெரியனர்,
சிறைக்குடி ஆந்தையார், உருத்திரனர்,
ஒக்கூர் மாசாத்தியார். (256-275)—828

43 கூழிக் கொற்றனர், ஓரிற் பிச்சையார், பேரி
சாத்தனர், மதுரை மருத னிளநாகனர்,
நக்கீரர், குடவாயிற் கீரத்தனர், நாகம்
போத்தனர்,பாலை பாடிய பெருங்கடுங்கோ,
மிளைவேடித்தனர், பூதத்தேவனர், எயிற்
றியனர், கச்சிப்பேட்டு நன்னகையார், கபி
லர், பெருங் கண்ணனர், கல்பொரு சிறு
நுரையார், கபிலர், பரணர். (276-292)—845

44 கள்ளில் ஆத்திரையனர், அஞ்சில் ஆந்தை
யார், தூங்கல் ஓரியார், பெரும்பாக்கனர்,
காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ண
னர், பரணர், வெண்மணிப் பூதியார்,
சிறைக்குடி ஆந்தையார், குன்றியனர், மாங்
குடி கிழார், அம்மூவனர், கணக்காயன்
தத்தனர், குப்பைக் கோழியார், அம்மூவ
னர், கடம்பனூர் சாண்டிலியனர், பெறுந்
தோட் குறுஞ்சாத்தனர். (293-308)—868

45 உறையூர்ச் சல்லியன் குமாரனர், பெருங்
கண்ணனர், சேந்தன்கீரனர், கபிலர், (பேர்
தெரியாதபுலவர்) பெருஞ்சாத்தனர்,தும்பி
சேர்க்கீரனர், தும்பிசேர் கீரனர், மது
ரைக் கண்டாகத்தனர், அம்மூவனர்,
தாயங் கண்ணனர், தும்பி மோசிகீரனர்,
(பேர்தெரியாத புலவர்), ஐயூர் முடவனர்,
பதடிவைகலார். (309-323)—883

46 கவை மகனர்,நன்னகையார், அம்மூவனர்,
பரணர், ஓதலாந்தையார், கழார்க்கீர னெ
யிற்றியினர், வடாப் பிரமந்தனர், மதுரை
மருதங்கிழார் மகனர் இளம்போத்தனர்,
உழுந்தினைம்புலனர், இளம்பூதனர், இருந்
தையூர்க் கொற்றன் புலவனர், குன்றிய
னர், பொதுக்கயத்துக் கீரந்தையார்,
பெருங்குன்றூர் கிழார். (324-338)—905

47 பேயார், அம்மூவனர், மிளைகிழான் நல்
வேட்டனர், காவிரிப்பூம் பட்டினத்துக்
கந்தரத்தனர், ஈழத்துப் பூதந்தேவனர்,
குறுங்குடி மருதனர், அண்டர்மகன் குறு
வழுதியார், வாயிலிளங் கண்ணனர், கா
விரிப்பூம் பட்டினத்துச் சேந்தன் கண்ண
னர், மாவளத்தார், சாத்தனர், ஆலத்தூர்
கிழார், அம்மூவனர், கடியலூர் உருத்திரங்
கண்ணனர், கடியலூர் உருத்திரங் கண்ண
னர், கயத்தூர்கிழார், கபிலர், கயமனர்,
கபிலர், கொற்றனர், பேயனர், மதுரை
யீழத்துப் பூதன்தேவனர், கபிலர்.
(339-361)—923

48 வேம்பற்றூர் கண்ணன் கூத்தனர், சொல்
லூர்க் கொற்றனர், ஔவையார், மதுரை
நல்வெள்ளியார், பேரிசாத்தனர், மதுரை
மருதனிள நாகனர், நக்கீரர், முடவாயிற்
கீரத்தனர், வில்லக விரலினர், உறையூர்
முதுகூற்றனர், விற்றூற்று மூதெயினனர்,
மதுரைக் கோலம் புல்லனர், உறையூர்ப்
பலகாயனர், படுமரத்து மோசிகீரன்
கொற்றனர், மோசி கொற்றனர், கயமனர்,
கருவூர் கந்தப்பிள்ளையார். (362-380)—943

49 குறுங்கீரனர், படுமரத்து மோசிகீரனர்,
காம்போதியார், கபிலர், வெள்ளி விதியார்,
கங்குல் வெள்ளத்தார், ஔவையார், வேட்
டக் கண்ணனர், உறையூர் முதுகொற்ற
னர், பொன்மணியார் ... 969

50 தும்பிசேர் கீரனர், பரணர், குறியிறையார்,
கயமனர், அம்மூவனர், பாலைபாடிய பெ
ருங்கடுங்கோ, பரணர், பேயனர், அம்மூவ
னர் ... 983

## அப்பர்.

அப்பரும் அறுபத்தினன்கு கலைகளும்

30 வில்வித்தை ... 583
31 „ ... 603
32 யானை ஏற்றமும் குதிரை ஏற்றமும் ... 623
33 „ „ ... 643
34 மல்யுத்தம் ... 663
35 இரத்தினப் பரிட்சை ... 683
36 „ „ ... 703
37 „ „ ... 723
38 „ „ ... 746
39 „ „ ... 767
41 பூமிப் பரிட்சை ... 808
42 „ „ ... 823
43 „ „ ... 843



இதழ். பக்கம்.
44 சிற்பமும் உருவ சாத்திரமும் ... 868
45 „ „ ... 887
46 „ „ ... 903
47 „ „ ... 928
48 ஓவியமும் கவித்துவமும் ... 943
49 „ „ ... 963
50 „ „ ... 986

## நம்மாழ்வார் வைபவம்.

திருவாய்மொழி

26 1-ம் பத்து—6-ம் தசகம் ... 507
27 1-ம் பத்து—7-ம் தசகம் ... 527
28 1 „ — 8 „ ... 551
29 1 „ — 8 „ ... 575
30 1 „ — 9 „ ... 586
31 1 „ — 9 „ ... 611
32 1 „ —10 „ ... 631
33 1 „ —10 „ ... 647
34 2-ம்பத்து—1-ம் தசகம் ... 675
35 2 „ — 1 „ ... 688
36 2 „ — 2 „ ... 715
44 2 „ — 3 „ ... 872
45 2 „ — 3 „ ... 889
46 2 „ — 4-ம் தசகம் ... 912
47 2 „ — 5 „ ... 935
48 2 „ — 5 „ ... 949
49 2 „ — 6 „ ... 967
50 2 „ — 6 „ ... 988

## மானத சாத்திரம்.

26 நடத்தை—பழக்கம்உடன், நிலை மடக்கு 509
27 „ —சிற்றிளக்கம், நரம்புகளின் இளக்கம், மடை ஏற்றல், மடை மாற்றல். ... 530
28 „ —நரப்பத்தொடர்பு, கருத்துப் பாய்தல், இணைப்பு இயையும் இயல்பு, உடற் பழக்கம், எதிர்மறைப் பொருத்தம் ... 545
29 „ —பழக்கச் செயலின் உட்துடிப்பு, முதலின் கருவி, உட்துடிப்பும் பழக்கமும், பிற மெய்ப்பாடுகள் ... 570
30 „ —உணர்வுப் பழக்கம், வழியுணர்தல், மீனின் அறிவு, பயிற்சியாலோ பழக்கம், மக்நீகலின் செய்காட்சி, இன்ப நினைவுப் பயிற்சி— ... 592
31 „ —இன்பமும் வேட்கையும்; அகத்தேர்தல், உடனிலையோ முதனிலையோ, இன்பமும் நிறமா, இன்பம் ஒரு வழிகாட்டி, இன்பமா இயக்கி வைக்கின்றது— ... 604
32 „ —தட்டுத்தடுமாறித் தகுதி கற்றல், நோக்கமுடைமை, அறிவு குருட்டுப் போக்கா, நாயினறிவு, முயன்று தவறுவதிலும் நோக்கமுண்டு, சிறப்புணர்வு... 628

இதழ்.
33 „ —

## தேவார.

26 தேவாரமும் வா.
27 „
28 „
29 „ „

## மாதவி ம.

26 தேவகணிகை மரபில் மா
27 விண்ணவர்கோன் விழா
28 யாழ்க்கருவி இடைநின்று உறவித்தமை
29 „ „
30 „ „ „
31 மாதவி காதன்மடலும் கோ மறுமொழித் திறனும்
32 கண்ணகி கண்ட கன
33 „
34 ஆயர்மகளிர் குரவை
35 கோவலன் செயலைக் கௌசிகன்
36 மாதவிமகளும் மன்னர் மகனும்—மணிமேகலா தெய்வம்
37 மாதவி மகள் பழம்பிறப் புணர்ந்த...
38 அறவணவடிகளும் இராஜமாதேவியும் ...

## தமிழ்ப்பாடம்.

நைடதம்—நளன்தூதுப்படலம்.

பக்கங்கள்:—511, 532, 548, 568, 588, 608, 651, 670, 693, 707, 728, 750, 771, 788, 826, 850, இலக்கணம்—870, 891, 914, 955.

## மொழி பெயர்ப்புக் கட்டுரைகள்.

பிளேட்டோ எழுதிய, 'பிரஜைகளின் கடமை 790, 811, 833, மனித சுகமும் தத்துவ ஞான 892, ஆஸ்கார் ஒயில்டின் அருமை வாசகம் 910 சர்ட் ஸ்டீல்—மருணத் தருணம்' 934. வாழ்வின் னும் கருமமும் 971.

## பிற விடயங்கள்.

26 மதிப்புரை (கந்தவனநாதர் நான்மணிமாலை)
29 தானே நிறைந்த தனிநெஞ்சம் ...
31 தனிப்பாடல் (நாமகள் திருப்பள்ளியெழுச்சி)...
32 „ (மழை) ...
39 „ (குருபரனகி அருளியபெருமை)
40 இளமையும் முதுமையும் ...
43 தனிப்பாடல்—முருகன் ...
43 பழமுதிர் சோலை—தங்கமேதான் ...
45 தனிப்பாடல் (நாமகள் ஆசைப்பத்து) ....
46 „ (கலைமகள்) ...
47 இலங்கையின் வீழ்ச்சி ...
48 என்னையும் பெற்றேன் (ஒரு சிறு கதை)...
48 ஞானமொழிகள் ...
50 வேண்டல் வளர்த்தமரம் (ஒரு சிறு கதை)

189134

இனம்!!

தியா

...த்தையும்ஆரோக்
...வத்தையும் விரும்
...னும் இப் புத்தகத்
...ம்.

மஞ்சரி பார்மஸி,
..., சைனா பஜார், மதராஸ்.



## கந்தபுராண வெண்பா

வெண்பாப் புலி வேலுசாமி அவர்களால் பாடப் பெற்றது தமிழரால் போற்றப்படுவதற் குரியது.

ஆறு காண்டங்களையும் 5665 சிறந்த நேரிசை வெண்பாக்களையு முடையது.

விலை ரூபா **4.** தபால் செலவு வேறு

EDUCATIONAL PUBLISHING CO.
Nungambakam, Madras.



...தர் கடிதம்.

...ஞானத்துறை படிந்துவைகும் ...பது வருடங்களுக்கு முன்னர் ...எழுதிய சில அரிய கடிதங்களின் ... நூல். இதன் விலை அணு 2. இர... அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம்.

லோகோபகாரி ஆபீஸ்,
...தசிந்தாதிரிப்பேட்டை, சென்னை.



**Estd.** NATIONAL **1906**

**INSURANCE COMPANY LIMITED.**

*Head Office:*-**9, Old Court House St., Calcutta**

Before taking out a life assurance policy it is better to apply all the rigid tests for a good company.

*The "National" will surpass any other Company in these tests.*

(1) Indian Capital-Indian Management-for the benefit of Indians.
(2) The Company has never contested a claim on a technicality.
(3) The low safe rates of premium provide maximum assurance at minimum cost.

The "National" keeps well ahead of the times and its policy of 'fair and square dealing' which began with its founding, ever since 1906, has been continuous.

For Particulars & Agency terms.

Apply to:— R. G. DAS & CO., *Managers.*
**T. ANANTACHARI**, B.A.,
Branch Secretary.

NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, Loane Square,
Broadway, Madras.



...ாலே... ...க்கை.

...தின் முதலிரண் டாண்டு பைண்ட் புத்தகங்கள் மிகச் சிலவே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவில் வரைக.

கலா நிலயம் ஆபீஸ்,
வேளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை



## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

### பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத் தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல் வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

### ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபா சனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத் தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரை யோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணு 12.

### கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரி யர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறி ப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

### ஏமாங்கதத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன் னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மை யின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன் கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந் திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம் பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத் தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

### முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ண குமாரிசெய்த சிறந்த மொழிபெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந் நாவல்நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1-8.

**விலாசம்:—கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.**


**Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)**